பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 15 வியாழக்கிழமை 29.03.2018 கதிர் 144

**இது ரகசியம் அல்ல!**

'அரசியலிலை இதெல்லாம் சாதாரணமப்பா...!'

தமிழ் சினிமா ஒன்றில் நகைச் சுவை நடிகர் கவுண்டமணி கூறும் 'பஞ்ச்' டயலாக் இது. தான் செய்யும் திருகுதாளங்களை நியாயப்படுத்த அவர் கூறும் வாசகம்.

பக்கம் 03

# மத்தியிலே நல்லாட்சி மாநிலத்தில் கூட்டாட்சி

## வடக்குப் பிரதேச சபைகள் எங்கும் கூட்டமைப்பின் 'தேசிய' நிர்வாகம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 29

மத்தியில் ஐ.தே.க. - சு.க. இணைந்த நல்லாட்சி அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவோடு பதவியில் தொடர்ந்துவரும் நிலையில், வடக்கில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளில் ஈ.பி.டி.பி., ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் பேராதரவுடன்ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் படலத்தில் தொடர்ந்து முன்னேறி வருகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

பக்கம் 18



## படைச் சிப்பாய் பறிகொடுத்த துப்பாக்கி மீட்பு

முல்லைத்தீவு, மார்ச் 29

முல்லைத்தீவு - முறிப் புப் பாலத்தின் கீழிருந்து ஏ.கே -47 துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

ஆண்டாங்குளம் காட்டுப் பகுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவரிடம் இருந்த ஏ.கே - 47 துப்பாக்கி ஒன்றை அடையாளம் தெரியாத நபர் ஒருவர் நேற்று முன்தினம் பறித்துச் சென்றார் எனத்

பக்கம் 03

## யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்ப 10 வருடத் திட்டம்

கொழும்பு, மார்ச் 29

போருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தின் கல்வி செயற்பாடுகள் முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளன. இதனால் அதனை மீண்டும் கட்டியெழுப்பும் வகையில் 10 வருடத்

பக்கம் 03

## வெட்கமற்ற கூட்டமைப்பு

### சாடுகிறார் சுரேஷ்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 29

தங்களை முன்னர் பெரிய கொள்கைப் பிடிப்பாளர்களாகக் காட்டிக் கொண்டவர்கள் - தங்களது கொள்கைக்கும் ஈ.பி.டி.பிக்கும் ஒத்துவராது

பக்கம் 18

## ரணிலின் கட்டுப்பாட்டிலிருந்த மத்திய வங்கி நிதியமைச்சிடம்!

### ஜனாதிபதி நேற்று அதிரடி உத்தரவு

கொழும்பு, மார்ச் 29

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கட்டுப்பாட்டில் உள்ள தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் இருந்த இலங்கை மத்திய வங்கியை நிதி அமைச்சுக்கு மாற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று உத்தரவிட்டார்.

இது தொடர்பான சிறப்பு வர்த்தமானி அறிவிப்புக்கான கட்டளையில்

பக்கம் 03

## போலி பேஸ்புக் கணக்குகளை முடக்க முடிவு!

கொழும்பு, மார்ச் 29

இலங்கையில் போலி பேஸ்புக் கணக்குகளை நீக்குவதற்கு பேஸ்புக் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கணினி அவசரப் பிரிவின் தகவல் பாதுகாப்பு

பக்கம் 18

## காங்கேசன் துறைமுகத்தின் சீரமைப்புப்பணி விரைவில்

### அமைச்சரவை நேற்று ஒப்புதல்

கொழும்பு, மார்ச் 29

வடக்கு - கிழக்குப் பொருளாதார நுழைவாயில் வலய அபிவிருத்தி செயற்திட்டத்தில் காங்கேசன் துறை துறைமுகத்தைச் சீரமைப்பதற்கான ஆரம்பப்

பக்கம் 18

## ரணிலின் பதவியை அரசு பாதுகாக்கும்!

### அமைச்சர் ராஜித உறுதி

கொழும்பு, மார்ச் 29

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கூட்டு எதிரணியால் நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசு உறுதியாகத் தோற்கடிக்கும்.அதன் பின்னர் அரசில் அதிரடியான மாற்றங்களும் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சரவைப் பேச்சாளரும், சுகாதார அமைச்

பக்கம் 03

## கோட்டா கொலைகளை செய்தாரென்பது உறுதி

### உண்மைகள் மிகவிரைவில் வெளிவரும் என்கிறார் ராஜித

கொழும்பு, மார்ச் 29

கோட்டாபய கொலைகளைச் செய்தார் என்பது உறுதியாகிவிட்டது. விரைவில் அவற்றை வெளிப்படுத்துவோம்.

இவ்வாறு குறிப்பிட்டார் அமைச்சரவைப் பேச்சாளரும், சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன.

அரச தகவல் திணைக்களக் கேட்போர் கூடத்தில்

பக்கம் 18

## பிரேரணையை முறியடிக்க வியூகம் வகுக்கிறார் ரணில்!



கொழும்பு, மார்ச் 29

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கூட்டு எதிரணியால் நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை முறியடிப்பதற்கான வியூகங்கள் தொடர்பில் ஐக்கிய தேசிய முன்னணியின்

பக்கம் 18

## ஐ.தே.கவில் விரைவில் அதிரடி மறுசீரமைப்பு

கொழும்பு, மார்ச் 29

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கூட்டு எதிரணியால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்த கையோடு ஐக்கிய தேசியக் கட்சியில் அதிரடியான மறு

பக்கம் 03

## பல்கலை. மாணவர் படுகொலை:

### சந்தேகநபர்கள் ஐந்து பேரும் மீண்டும் பொலிஸ் பணியில்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கின் சந்தேகநபர்களான 5 பொலிஸ் உத்தியோகத்தர்களும் மீளவும் சேவையில் இணைக்கப்

பக்கம் 18

காலைக்கதிர் Kalaikkathir



# தொண்டர் ஆசிரியர் நியமனம் குறித்த முறைப்பாடு தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக் குழு கலந்துரையாடலுக்கு அழைப்பு

வவுனியா, மார்ச் 29

தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் முறைகேடு இடம்பெற்றுள்ளது என்றும், உரிய தகைமைகள், ஆவணங்களைக் கொண்டிருந்தபோதும் தாம் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்றும் பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் 25 பேர் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாகக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது என ஆணைக்குழுவின் வவுனியா இணைப்பாளரும் சட்டத்தரணியுமான லீனஸ் வசந்தராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்த காலப்பகுதியிலும் அதனை அண்டிய காலப் பகுதியிலும் நீண்டகாலமாகத் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றிய தாம் வலய மட்டத்திலும், மாகாண மத்திய அரசாலும் நடத்தப்பட்ட பல நேர்முகத் தேர்வுகளில் தோற்றியிருந்த போதும் கடந்த 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வவுனியா தெற்கு வலயத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

2010 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நியமனத்திலும் அரசியல் தலையீடு காரணமாகச் சிலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், நீண்ட காலம் கற்பித்து வரும் தாம் கோரப்பட்ட தகைமைகள், ஆவணங்கள் இருந்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்றும் -

கோரப்பட்ட தகைமைகள் மற்றும் ஆவணங்களைக் கொண்டிராத சிலர் உள்ளவாங்கப்பட்டுள்ளனர். இதனால் இந்த நேர்முகத் தேர்வில் முறைகேடு இடம்பெற்றுள்ளது எனத் தாம் கருதுகின்றார்கள் எனத் தெரிவித்து பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் சார்பாக ஒக்ரோபர் 6 ஆம் திகதி வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் 25 பேர் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பில் தீர்வு காணும் வகையில் எதிர்வரும் 10 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கு வடமாகாண ஆளுநரின் செயலாளர், வடமாகாண முதலமைச்சரின் செயலாளர், வட மாகாண கல்வி அமைச்சரின் செயலாளர் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், முறைப்பாட்டாளர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க-100)

## ஊடகவியலாளர்களுக்கு ஜனாதிபதி விருது

கொழும்பு, மார்ச் 29

இலங்கை ஊடகவியலாளர்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் மற்றும் அவர்களின் பங்களிப்புகள் என்பவற்றை மதிப்பிடுவதற்காக ஊடகவியலாளர்களுக்கான ஜனாதிபதி ஊடக விருது வழங்கும் வைபவம் ஒன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த வைபவம் 2018ஆம் ஆண்டிலிருந்து வருடந்தோறும் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அறநெறிப் பாடசாலைக் கல்வியைக் கட்டாயமாக்க நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 29

அறநெறிப் பாடசாலைக் கல்வியை ஞாயிற்றுக்கிழமைகளில் கட்டாயமாக்குவதற்கான கொள்கைரீதியான தீர்மானத்தை அரசு மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான பிரேரணை விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது எனப் பௌத்தசாசன அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஏனைய மதங்களைச் சேர்ந்த சமயங்களுக்கு பொறுப்பான அமைச்சர்களோடும், கல்வி அமைச்சரோடும் இணைந்து பிரேரணையை சமர்ப்பிக்க இருக்கிறோம்.

இதில் அனைத்து மதங்களையும் சேர்ந்த அறநெறிக் கல்வியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு பாடசாலை பரீட்சையின் போது புள்ளிகள் வழங்குவது தொடர்பில் கல்வி அமைச்சருடன் பேச்சு நடத்த தீர்மானித்துள்ளோம் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

பௌத்த மத அலுவல்கள் அமைச்சில் பௌத்த மத ஆலோசனை சபைக்கூட்டத்தில் இந்த விடயங்களை தெரிவித்தார்.



# பண்டிதர் சின்னத்தம்பி ஞாபகார்த்த பயணிகள் நிழற்குடை திறந்து வைப்பு




வவுனியா, மார்ச் 29

பண்டிதர் சுப்பிரமணியம் சின்னத்தம்பி ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட பயணிகள் நிழற்குடையை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் வவுனியாவில் திறந்து வைத்தார்.

வவுனியாவில் பல்வேறு கலைத் துறையில் ஈடுபட்ட பண்டிதர் பல புத்தகங்களை எழுத்தியமையுடன் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் பாடசாலை கீதத்தையும் இயற்றியிருந்தார்.

இந்த நிலையில், அன்னாரது பேரன் சீவரத்தினம் சிவநந்தனால் அவரது நினைவாக இராணுவத்தினரின் கட்டுப் பாட்டில் இருந்து மக்களிடம் மீள் கையளிக்கப்பட்ட பேயாடி கூழாங்குளத்தில் நிழற்குடை அமைக்கப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் உறுப்பினர் ப. சத்தியநாதன், மகேந்திரன், வவுனியா நகர சபை உறுப்பினர் எம். பாயிஸ் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர். (க-100)

# வவுனியா பஸ் நிலையப் பகுதியில் விபசார நடவடிக்கையில் பெண்கள்

## வவுனியா பொலிஸில் முறைப்பாடுகள்

வவுனியா பஸ் நிலையப் பகுதியில் பெண்கள் விபசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனப் பொலிஸாரின் தமிழ் மொழிச் சேவைப் பிரிவிற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் செயற்படும் தமிழ்மொழி சேவைப்பிரிவிற்கே இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என அந்தப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்-

வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்திலுள்ள தமிழ்மொழி சேவைப் பிரிவிற்கு வன்னிப் பகுதி பொது மக்களிடமிருந்து அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. அவற்றை அணுகி உடனடியாகத் தீர்வுகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

அதிலும் அதிகளவிலான முறைப்பாடுகள் குடும்பவன்முறைகள், சட்டவிரோத மரக் கடத்தல்கள், சமூகச்சீரழிவுகள், மதுபோதையில் வன்முறைகள், பஸ் சேவைகள் போட்டி போட்டுச் செலுத்துதல் தொடர்பிலேயே முறைப்பாடுகள் அதிகளவாகக் கிடைத்து வருகின்றன.

இதையடுத்து, அந்தப் பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு உடனடியாகத் தகவல்களை வழங்கி அந்த நடவடிக்கைகள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படுகின்றன.

கடந்த சில தினங்களாக வவுனியா பழைய பஸ் நிலையப் பகுதிகளில் அதிகளவான பெண்கள் விபசார வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன என்றும் மேலும் தெரிவித்துள்ளனர். (க-100)

# மனைவியைக் காணவில்லை என கணவன் பொலிஸில் முறைப்பாடு!

வவுனியா, மார்ச் 29

தனது மனைவியைக் காணவில்லை எனக் கணவன் வவுனியா பொலிஸில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, நான்காம் கட்டை ஹிச்சிராபுரம் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஆரோக்கிய ஜோதி லெம்பேட் திவியா என்ற தனது மனைவி கடந்த திங்கட்கிழமை காலை தான் வேலைக்குச் செல்லும்போது வீட்டில் தனிமையில் இருந்தார் என்றும் வேலை முடிந்து மாலை வீட்டிற்குச் சென்ற போது மனைவியைக் காணவில்லை எனவும், தனது மனைவியின் தொலைபேசியும் இயங்கவில்லை எனவும் கணவன் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான, விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (க-100)

காலைக்கதிர்
Kalaikkathir



# கலவரப் பின்னணியில் மஹிந்தவின் சகாக்கள்!

## அரசு நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 29

கண்டியில் ஏற்பட்ட கலவரத்தின் பின்னணியில் மஹிந்த ஆதரவு கூட்டு எதிரணியின் உறுப்பினர் ஒருவர் செயற்பட்டுள்ளாரென சந்தேகிப்பதாக அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற, அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். இது குறித்து விசாரணைகளை நடத்தி வருவதாக தெரிவித்த அமைச்சர், விரைவில் உண்மைகள் அம்பலப்படுத்தப்படுமென மேலும் கூறினார். (ஐ)

### ஐ.தே.கவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீரமைப்புகள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த அமைச்சரவை செய்தியாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வெற்றிக்கொள்வதே தற்போதுள்ள முதன்மைப் பணியாகவுள்ளது. அதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியில் மேற்கொள்ள வேண்டிய அனைத்து மறுசீரமைப்புகளும் மேற்கொள்ளப்படும்.

பிரதமரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டுமென்ற கோரிக்கையை எவரும் முன்வைக்கவில்லை. பிரதமருக்கு ஆதரவான பிரேரணையே ஐ.தே.கவின் நாடாளுமன்ற குழு 80 பேரின் கையொப்பத்துடன். சபாநாயகரிடம் கையளித்துள்ளது. நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாங்கள் உறுதியாக வெற்றிக்கொள்வோம். அதன் பின்னர் எடுக்க வேண்டிய அனைத்துத் தீர்மானங்களும் எடுக்கப்படும். – என்றார். (ஐ)

### ரணிலின்பதவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சருமான ராஜித சேனாரத்ன.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த அமைச்சரவை செய்தியாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நீக்கவேண்டிய தேவை கூட்டு எதிரணியினருக்கு அவசியமாகவுள்ளது. கட்சியின் தலைவர் பதவியில் இருந்து பிரதமர் பதவியிலும் ரணில் விக்கிரமசிங்கவை நீக்கிவிட்டால் போட்டியின்றித் தேர்தலைச் சந்திக்க முடியும் என்பது அவர்களின் நிலைப்பாடாகவுள்ளது.

உறுதியாக நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசு வெற்றிக்கொள்ளும். இதில்கையொப்பமிட்டுள்ளவர்கள் தொடர்பில் தெளிவான தீர்மானம் எடுக்கப்படும். நாளை ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்கள் கூடி இது குறித்து முடிவெடுக்கவுள்ளனர். – என்றார்.

இதேவேளை, பிரதமர் பதவியை உங்களுக்கு வழங்குவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டுள்ளதாக ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பியதற்குப் பதிலளித்த அமைச்சர், அதற்கு இன்னமும்காலம்உள்ளது. இருக்கும் பணியை முதலில் செய்வோம். – என்றார். (ஐ)

### ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி நேற்று மாலை கையொப்பமிட்டார். ஜனாதிபதியின் இந்த அதிரடி உத்தரவினால் நேற்றுக் கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கை மத்திய வங்கி, பங்குப்பரிவர்த்தனை ஆணைக் குழு, வெளிநாட்டுக் கடன்களை முகாமை செய்யும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுபத்தாபனம் ஆகியன தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிடமிருந்து நிதி அமைச்சுக்கு மாற்றப்படுகின்றன.

உணவு ஆணையாளர் திணைக்களமும் நிதி அமைச்சுக்கு மாற்றப்படுகின்றது.

இதேவேளை, இலங்கை மத்திய வங்கி உள்ளிட்ட பொருளாதாரத் துறை சார் திணைக்களங்கள் நிதி அமைச்சின் கீழ் இருந்து வந்தன. எனினும் 2015ஆம் கூட்டு அரசின் அமைச்சரவை நியமனத்தின் போது அவற்றைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் உள்ள தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள் இயங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அப்போது அதிகாரமளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### யாழ்ப்பாணத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்திட்டம்ஒன்றுமுன்னெடுக்கவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற வடக்கு மாகாணத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

போருக்கு முன்னரான காலப் பகுதியில் வடக்கில் சிறப்பான கல்வி வளர்ச்சி காணப்பட்டது. சிறப்பான கல்வியை வழங்கும் மாவட்டங்களாகக் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகியன காணப்பட்டன.

எனினும், போருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தின் கல்வி வளர்ச்சி முற்றாக வீழ்ச்சியடைந்து பின்னடைவைச் சந்தித்து விட்டது. போரின் போது பாடசாலைகள் அழிக்கப்பட்டமை, ஆசிரியர்கள் வடக்கில் சேவையாற்ற விரும்பாமை உட்பட பல்வேறு பிரச்சினைகள் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டது .

இதன் காரணமாக வடக்கின் கல்வித் திட்டத்தினை மீண்டும் கட்டியெழுப்பு விசேட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். இதனால் மக்களின் பொருளாதார மட்டத்தினையும் உயர்த்த முடியும் – என்றார். (ஐ)

# இலங்கைக்கு வரிச் சலுகை; அமெரிக்க அரசு இணக்கம்

கொழும்பு, மார்ச் 29

இலங்கைக்கு விசேட பிரதிபலன்களை வழங்கும் வரிச் சலுகையை மீண்டும் வழங்கி, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சட்ட ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளார் எனக் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்றுத் தெரிவித்தது.

அமெரிக்கா இலங்கைக்கு வழங்கிவந்த வரிச்சலுகையானது கடந்த டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

இந்த வருடம் நிதி தொடர்பான விவகாரங்களில் இலங்கை உட்பட பல நாடுகளுக்கு வரிச்சலுகை நீடிக்கப்படவில்லை எனக் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் கடந்த டிசம்பர் 29 ஆம் திகதி அறிவித்தது.

எனினும் கடந்த 23 ஆம் திகதி ஜனாதிபதி ட்ரம்ப், இலங்கை மற்றும் மாலைதீவுக்கு வரிச்சலுகையை மீண்டும் வழங்க அனுமதியளித்து வரவு – செலவுத் திட்டம் தொடர்பான சட்ட ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

இதனடிப்படையில் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை அமெரிக்காவின் வரிச்சலுகை கிடைக்கும்.

இந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மார்ச் 23 ஆம் திகதி வரை இலங்கையில் இருந்து வரிசெலுத்தியே பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

கடந்த இரண்டு வருடங்களில் இலங்கை அமெரிக்காவுக்கு 5 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் மேல் பெறுமதியான பொருள்களை ஏற்றுமதி செய்துள்ளது.

இலங்கையின் ஆடை உற்பத்திகளுக்குப் பிரதான இறக்குமதி வர்த்தக சந்தையாக அமெரிக்கா இருந்து வருகிறது.

இலங்கை மத்திய வங்கியின் புள்ளி விவரங்களின் படி இலங்கையில் இருந்து கடந்த வருடம் வெளிநாடுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகளில் 25.6 வீதம் அமெரிக்காவுக்கே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# ஓ.எல். முடிவுகள் வெளியாகின



யாழ்ப்பாணம், மார்ச் 29

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை பரீட்சைத் திணைக்களம் நேற்று நள்ளிரவு இணையத்தில் வெளியிட்டது.

மாணவர்களும், பெற்றோர்களும் நேற்றிரவு முதல் தமது சுட்டிலக்கங்களைப் பயன்படுத்திப் பெறுபேறுகளைப் பார்த்தறிவதில் மும்முரமாயிருந்தனர். (உ)

# சுதாகரனின் விடுதலைக்காக தலைநகரில் திரண்ட மக்கள்!

கொழும்பு, மார்ச் 29

தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனை விடுவிக்குமாறு வலியுறுத்தி, தலைநகர் கொழும்பில் ஆர்ப்பாட்டமும் கையெழுத்து வேட்டையும் இடம்பெற்றது.

நேற்றுக் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால், இனம், மதம், மொழிகளைக் கடந்து திரண்ட மக்கள் ஆனந்த சுதாகரனை விடுவிக்குமாறு கோரிப் பதாதைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்தோடு, ஜனாதிபதிக்குக் கருணை மனு அனுப்புவதற்காக கையெழுத்துச் சேகரிக்கும் நடவடிக்கையும் இடம்பெற்றது. (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நமது வடக்கு அரசியலில் நடப்பவற்றைப் பார்த்து இப்படித்தான் சிலருக்கு ஆறுதல் கூற வேண்டியிருக்கின்றது.

நேற்றுக் காலையில் கந்த ரோடையில் சித்தார்த்தன் எம்.பியின் தாயாரின் மரண வீட்டுக்குச் சென்ற கூட்டமைப்பு ஆதரவாளர் ஒருவர் நேற்று மாலை அலுவலகத்துக்கு வந்தார்.

*"இண்டைக்கு ஒரு புதினம்..... செத்த வீட்டிலை எங்கடை ஆக்கள் ஒருத்தரை ஒருத்தர் 'தோழர்' எண்டு அழைத்துப் பேசியதைக் கண்டேன்...!"* – என்றார்.

*"இதிலை என்ன காணும் புதினம் இருக்கு.... உவர் சித்தர் எந்த இயக்கம்...? புளொட்டின்ரை மூலப் பிரதிநிதி அவர். அந்த இயக்கத்திலை ஆரம்பத்திலை இருந்து சக உறுப்பினர்களை 'தோழர்' எண்டுதானே அழைக்கிறவையள்.... அதுதான் சித்தர் வீட்டுச் செத்த வீட்டுக்கு வந்தவையள் ஆளையாள் 'தோழர்' எண்டு அழைக்கிறதிலை என்ன புதினம் கிடக்கு...?"* – என்றேன்.

*"உமக்கு விளக்கம் குறைவு... அப்படித் தோழர் எண்டு அழைச்சவை பழுத்த தமிழரசுக் கட்சிப் பொடியள் பாரும்...."* – என்றார்.

*"ஓ! அப்படியா...? அப்படி என்றால் புதுசாச் சேர்ந்த சகவாசத் தோசம் போலும்....!"* – என்றேன் நான்.

*"ஓம்.... ஓம்.... நீர் ரியூப்லைற் காணும்... கொஞ்சம் பிந்தித்தான் உமக்குப் பத்தும்...!"* – என்று சினந்து கொண்டார் அவர்.

★ ★ ★

நேற்றிரவு நீண்ட காலத்துக்குப்பின்னர் எனது மூத்த நண்பர் ஒருவரிடம் 'விசிட்' அடித்தேன். தற்போதைய அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களினால் கொதித்துப் போய் இருந்தார்.

கல்வித்துறையில் குறிப்பிடத்தக்க உயர் பதவியில் இருந்து ஓய்வுபெற்றவர். நெருக்கடி மற்றும் யுத்த காலத்தில் கல்வித் துறை சீர்கெடாமல் தொடர்வதற்கு தமது உயிரைப் பணயம் வைத்து – 'ரிஸ்க்' எடுத்து – பணியாற்றியவர்களுள் ஒருவர். வடமராட்சி இரத்தம் ஓடுவதால் கொஞ்சம் பிரபாகரன்பாணிச் சிந்தனையோட்டம் உள்ளவர். என்னைக் கண்டதும் சீறினார்.

*"டேய் உதென்னடா நடக்குது...? இயக்கம் தொடங்கின காலத்திலை இருந்து அழியிற வரைக்கும் பக்கத்திலை இருந்து பார்த்தனாங்கள்... ஸ்ரீதர் தியேட்டர் படியிலை கால் வைக்கிறது இல்லை எண்ட கொள்கைக்காகப் புரோமோஷன்களைக் கோட்டை விட்டவங்கள்.... உதென்னடா உவங்கள் நாரந்தனை அடியை மறந்து போட்டு, தோளிலை கைபோடுறாங்கள்...!"* – என்று சினந்தார் அவர்.

அவரைச் சமாதானப்படுத்த எனக்குக் கவுண்டமணியின் 'டயலாக்' உதவி புரிந்தது.

*"இல்லை... ஸேர்... அரசியலிலை இதெல்லாம் சாதாரணமப்பா...!"* – என்றேன்.

அலுவலகம் திரும்பியதும், கணினிக்கு முன்பு இருந்த ஒரு ஊடகத் தோழர் (பாருங்கள் என்னையும் 'தோழர்' என்ற சொல் பற்றிக் கொண்டுவிட்டது. நியூஸ் தொடர்பாலுக்காகத் தொலைபேசி எடுத்து அடிக்கடி பேசியதால் வந்திருக்குமோ...) என்னை அழைத்து முகப்புத்தகத்தில் வந்திருந்த ஓரிரு கொமண்டுகளைக் காட்டினார்.

*"அப்ப இனிமேல் சூளை மேட்டு வழக்கிலையும் சுமந்திரன் ஆஜராகுவாரா?"* – என்ற கேள்வியுடன் ஒரு கொமண்ட்.

*"யாழ்ப்பாணத்துப் பேப்பர் வழக்கிலிருந்து சுமந்திரன் விலகிக் கொள்ளுவதும் டீலின் ஒரு பகுதியாக இருக்குமோ...?"* – இன்னொருவரின் கொமண்டின் சாராம்சம் இது.

*"வேண்டாம் உந்த விவகாரம்.... இது சுமந்திரனின் புரொவெஷனிலை கைவைக்கிற கிண்டல்... அது தப்பு... அது அவருக்குரிய உரிமை.... அப்படிக் கொமண்ட் போடுறது தப்பு எண்டு நீங்கள் ஒரு பதில் கொமண்ட் போடுங்கோ"* – என்று 'அட்வைஸ்' கொடுத்தேன் நான்....

★ ★ ★

'மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி!' என்பது டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி. கட்சியின் மகுடவாசகம்.

ஆனால், மனிசன் ஒரு மாதிரி 'மத்தியில் நல்லாட்சி; மாநிலத்தில் கூட்டாட்சி!' – என்ற நிலைமைக்காவது விடயத்தை நகர்த்திப்போட்டுது... அது குறிப்பிட வேண்டிய விடயம்தானே பாருங்கோ...!

- மின்னல் -

### படைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து ஆண்டாங்குளம் பகுதியில் அதிகளவு படையினர் குவிக்கப்பட்டுச் சந்தேக நபரை வலைவீசித் தேடும் நடவடிக்கை நடந்தது. இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில் முள்ளியவளை முறிப்புப் பாலத்தின் கீழ் ஏ.கே – 47 துப்பாக்கி ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில் சந்தேக நபர் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை எனப் பொலிஸார் கூறினர். (ஐ)

பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு
தரம் 1 முதல் தரம் 11 வரையான
2018 இன் மாணவர் கணிப்பீட்டறிக்கை
தேர்ச்சியறிக்கை வெளிவந்து விட்டது.
உடன் பெற்றுக் கொள்ளவும்.
தயா அச்சகம்
575, கே.எஸ்.வீதி (நாச்சிமார் கோவிலடி), யாழ்ப்பாணம். 077 396 5214

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மணல் விற்பனைச் சீத்துவம்!

நாட்டில் சட்ட விரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்ட மணல், கல் விற்பனையைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கின்றார்.

புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் வெள்ளிவிழா நிகழ்வில் உரையாற்றுகையில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

இதனை நோக்கும் போது யாழ்ப்பாண மக்களுக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியாத நிலைமைதான் ஏற்பட்டுள்ளது.

வடக்கு மக்களைப் பொறுத்தவரை மணல் விவகாரத்தில் இங்கு, 'உள்ளதையும் கெடுத்தானாம் கொள்ளிக் கண்ணன்' என்ற நிலைமைதான் ஏற்பட்டிருக்கின்றது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட தரப்புகள் இங்கு பண்ணிய அரசியல் திருகுதாளங்களின் விளைவால் 'கள்ள மணல் பிஸினஸ்' கொடி கட்டிப் பறக்க, சாதாரண மக்கள் பெரிதும் அந்தரப்படும் மோசமான நிலைமைதான் ஏற்பட்டிருக்கின்றது.

மக்கள் வாக்குகளைப் பயன்படுத்தி பதவிக்கு - அதிகாரத்துக்கு - வந்த பிரதிநிதிகள் இந்த மண் விவகாரத்தில் பண்ணிய ஆர்ப்பாட்டங்கள், திருகுதாளங்கள், நடிப்புகள் சாதாரண மக்களுக்கு 'சட்டியிலிருந்து அடுப்புக்குள் வீழ்ந்த' மோசமான நிலையைத்தான் ஏற்படுத்தியுள்ளன. அப்படி மோசமான நிலைக்குள் பொது மக்களைத் தள்ளிவிட்டுக் கடந்த மூன்று வருடங்களாக ஏதும் தெரியாதவர்கள் போல சம்பந்தப்பட்ட இந்த அரசியல்வாதிகள் பம்மிக் கொண்டிருக்கின்றமைதான் வேதனை.

இந்த அரசியல்வாதிகளின் அரசியல் குசும்புத்தனங்களால், கள்ள மணல் அகழ்தல் நின்றுவிடவில்லை; மாறாக, அது கொடி கட்டிப் பறக்கத் தொடங்கியிருக்கின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள், காவல்துறையினர், இந்தத் துறையின் 'நிபுணர்கள்' போன்ற தரப்பாரின் வருமானத்தைப் பன்மடங்காக்கி, சாதாரண மக்களைப் பேரவலத்தில் ஆழ்த்தி விட்டு, அதற்குக் காரணமான அரசியல்வாதிகள் மௌனம் சாதிக்கின்றமை கொடுமையிலும் கொடுமை.

இதில் உண்மை நிலைவரத்தை - மக்கள் கஷ்டத்தை - வெளிப்படையாக எழுத முயன்றால் தாயக மண்ணை களவாக விற்பவர்களுக்காக வலிந்து கட்டி, பரிந்து பேசுகின்றோம் என்று இந்த அரசியல்வாதிகளும் அவர்களின் 'செம்புதூக்கி'களும் சபித்துக் கொட்டுவர் என்பது நிச்சயம்.

ஆனால், எது எப்படியாயினும், உண்மையை - மக்களின் அவலத்தை - வெளிப்படுத்துவது நமது கடமையாகின்றது.

சரியோ - பிழையோ முன்னைய ஆட்சியில் - ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்த சமயத்தில் - வடக்கு மக்கள் தங்கள் கட்டடத் தேவைகளுக்கு மணலை ஒரு லோர்ட் 15 ஆயிரம் ரூபா முதல் 20 ஆயிரம் ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் பெறக்கூடியதாக இருந்தது.

அதனை 'மகேஸ்வரி நிதியம்' என்ற தனிப்பட்ட அமைப்புக்கு ஊடாக முன்னெடுத்ததன் மூலம் பல கோடி ரூபாக்கள் சுளையாகச் சூறையாடப்பட்டுள்ளன. தாயக மண்ணை விற்றுக் கேவலப் பிழைப்பு நடத்துகின்றனர் என்றெல்லாம் குற்றங்கள் சுமத்தப்பட்டன. அப்படி இல்லை என்று மறுப்பதோ, நியாயப்படுத்துவதோ நமது தேவை அல்ல. அது சரியாகவும் இருக்கலாம்; தவறாகவும் இருக்கலாம்; அது வேறு.

புதிய 'நல்லாட்சி' அரசு பதவிக்கு வந்ததும், அந்தச் செல்வாக்கோடு இங்கு அரசியல் நடத்தியவர்கள் - நடத்துபவர்கள் - அந்த மணல் விநியோக முறைமையைத் தமது செல்வாக்கினால் தடுத்து நிறுத்தினர். நடந்த ஊழல்களை அம்பலப்படுத்தப் போகின்றார்கள் என்று மார் தட்டினர்; ஆரவாரம் செய்தனர். ஆனால், எதுவும் நடக்கவே இல்லை.

இனியும் நடக்கும் என்று நம்புவதற்கும் இடமில்லை. பிரதேச சபைகள் தோறும் நிர்வாகத்தை நடத்துவதற்கு ஈ.பி.டி.பியின் தயவை நாடியிருப்போர், அதன் தலைமைக்கு எதிராக இனியும் கெம்புவார்கள் என்று எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை.

மணல் கொள்ளை என்று அவர்கள் விமர்சித்தமையும், அதில் பணம் சுருட்டியோரை அம்பலப்படுத்துவோம் என்று அவர்கள் சூளுரைத்தமையும் எப்படியும் போகட்டும்.

குறைந்தபட்சம் அதைத் தடுத்தவர்கள் சாதாரண மக்களுக்கு நீதி, நியாயமான விலையில் மணல் கிடைக்கவாவது வழி செய்தார்களா?

அல்லது டக்ளஸ் தேவானந்தாவின் கீழான மணல் விநியோக காலத்தில், ஒரு லோர்ட் 17 ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு விற்ற மணல், இன்று ஐம்பதாயிரம் ரூபாவுக்கு கள்ள விலையில் தாராளமாக விற்பனையாகின்றமையைத் தடுத்து நிறுத்தவும், இப்போது இடையில் கொள்ளை, கொள்ளையாக - சுளை சுளையாக - சுருட்டிக் கொண்டு போனவர்களை அம்பலப்படுத்தவுமாவது நடவடிக்கை எடுத்தார்களா? எடுப்பார்களா?

அரசியல் காழ்ப்புணர்ச்சியில் ஈ.பி.டி.பியையும், டக்ளஸ் தேவானந்தாவையும் தூற்றுவதற்காக 'மணல் பிஸ்னஸ் மோசடி' என்று வெட்டிப் பிளந்த தரப்புகள், கடைசியாக 17 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்ற மண்ணை ஐம்பதாயிரம் ரூபாவுக்கு உயர்த்தி பிற இடைத்தரகர்கள், காவல்துறையினர் சுளையாக விழுங்க இட மளித்துப் பார்த்திருக்கின்றார்கள். - இதுதான் நமது அரசியல் பிரதிநிதிகளின் - பிரகிருதிகளின் - சாதனை.

இந்தச் சீத்துவத்தில் அவர்களுடன் நாம் எல்லோரும் சேர்ந்து அதிகாரத்துக்குக் கொண்டு வந்த ஜனாதிபதி, கள்ள மணல் விற்பனையைத் தடுப்பேன் என்று சூளுரைத்திருகின்றார்.

இதைப் பார்த்து அழுவதா, சிரிப்பதா என்ற நிலைமைதான் வடக்கு மக்களுக்கு!

# திருடர்களைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



## மனித உரிமை நிலையம் குற்றச்சாட்டு

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு திருடர்களைப் பாதுகாக்கின்ற வேலையில் ஈடுபடாமல் எதிர்க்கட்சிக்குரிய கடமைகளைச் செய்ய வேண்டும் என இலங்கை மனித உரிமைகளுக்கான நிலையம் வலியுறுத்தியுள்ளது.

அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது, பிணை முறி மோசடிகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடந்துகொள்ளும் விதம் அவர்கள் திருடர்களைப் பாதுகாக்க முயற்சிப்பதை உறுதிப்படுத்துகின்றது எனச் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நண்பர்கள் இருப்பதை பிணைமுறி ஆணைக் குழுவிலும் பிணைமுறி மோசடிகள் தொடர்பிலான நாடாளுமன்ற விவாதத்தின் போதும் காணக்கூடியதாக இருந்தது.

யாருக்கு இதன் நன்மைகள் போய் சேர்ந்துள்ளன என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பிணைமுறி ஆணைக்குழுவுக்குச் சென்று கருத்துத் தெரிவித்த விதத்தில் நாம் கண்டோம்.

இலங்கை நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் இந்த நாட்டுக்குப் பொறுப்புக்கூற வேண்டும். அவர்கள் எதிர்க்கட்சி என்ற பாத்திரத்தை நாட்டுக்கு பொருந்தக்கூடிய விதத்தில் செயற்படக்கூடிய குழு என்பதைச் செயற்பாட்டில் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

வடக்கு, கிழக்கு பிரதேச நிர்வாகத்துக்கு அப்பால் சென்ற தேசிய எதிர்க்கட்சியின் கடமைகளை இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறைவேற்றுகின்றதா என்ற கேள்வி இவர்கள் திருடர்களைப் பாதுகாக்க முன்வந்தமையை எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ் மொழிபெயர்ப்பின் பிரதி இல்லாமல் பிணைமுறி விவாதத்தை நடத்த முடியாது போன்ற பல்வேறு உபாயங்களைக் கையாண்டு இந்த விவாதம் இடம்பெறுவதை நிறுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிப்பது, திருடர்களை தவிர வேறு எவருக்கும் சாதகமாக அமையாது.

பிணைமுறி மோசடிகள் என்றாலும் சரி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் நடைபெற்ற மோசடிகள் என்றாலும் சரி நாடாளுமன்ற விவாதமொன்றை நடத்துகின்ற நாடாளுமன்றச் சட்டப் பங்களிப்பை தோல்வியடையச் செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டுள்ளது.

அதில் மிகவும் துரதிஷ்டமான நிலைமையான வடக்கு கிழக்கு பிரதேச அரசியல் கட்சி என்ற வரையறைக்கு அப்பாற்சென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய அபிலாஷைகளுடன் முன்னோக்கி நகரும் நிறுவனமொன்றாக எதிர்க் கட்சியின் பாத்திரத்தை வெளிக்கொணர வேண்டும் என மேலும் குறிப்பிட்டார்.

# ஆஸி. ஆள்கடத்தல் தடுப்புஅதிகாரி பாதுகாப்புச் செயலாளருடன் சந்திப்பு!



கொழும்பு, மார்ச் 29

ஆஸ்திரேலிய நாட்டுக்கான ஆள்கடத்தல் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான சிரேஷ்ட பொறுப்பதிகாரி பீற்றர் கால்வர் பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்தியரத்னவைச் சந்தித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது பாதுகாப்புச் செயலாளர் மற்றும் ஆள் கடத்தல் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான சிரேஷ்ட பொறுப்பதிகாரி கால்வர் ஆகியோரிடையே சிநேகபூர்வ கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

# ஏப்ரல் 3 தொடக்கம் 9 வரை டெங்குக் கட்டுப்பாட்டு வாரம்

எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை பிரதேச நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிக்கப் படவுள்ளதால், அந்தத் தேசிய திட்டத்தின் நோக்கம் நிறைவேறுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என யாழ். சுகாதார வைத்திய அதிகாரி கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு :-

விசேட டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் எதிர்வரும் 2018 சித்திரை மாதம் 3 ஆம் திகதி முதல் - 9 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

டெங்கு நுளம்பு பெருகக்கூடிய சூழலை அகற்றி டெங்குத் தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாக்கும் முகமாகத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இதன் மூலமே அதிகரித்து வரும் டெங்கு நோய்த்தாக்கத்திலிருந்து விடுபட முடியும். இந்த தேசிய நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புக்கள் வழங்கித் தங்கள் தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச் சந்தைகள், மயானங்களின் சுற்றுப்புறச் சூழலைத் துப்புரவாகப் பேணுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இம்முறை டெங்குப் பெருக்கத்திற்குச் சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடு கள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன், அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத் தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(உ)

## புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கன்னி அமர்வு

முல்லைத்தீவு, மார்ச் 29

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கன்னி அமர்வு நேற்று இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் செ.பிறேமகாந்த் தலைமையில் நடைபெற்ற இந்த கன்னி அமர்வில், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அனைத்து உறுப்பினர்களும், பிரதேச சபையின் செயலாளரும் கலந்துகொண்டனர்.

## நாளை

30.03.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம் : சதுர்த்தசி மாலை 7.35 வரை
திதி : பூரம் காலை 7.09 வரை
சுபநேரம் : 6.13 –07.43 வரை
இராகுகாலம் : 10.43 – 12.13 வரை

காலைக்கதிர் Kalaikkathir



# ரணிலுக்கு எதிரான பிரேரணை கூட்டமைப்பின் முடிவு ஏப்.2 இல்!

(எஸ்.நிதர்ஷன்)

ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கூட்டமைப்பு எதிர்வரும் 2ஆம் திகதி முடிவெடுக்கும்.

– இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகப் பொது எதிரணி கொண்டு வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பில் எழுப்பிய கேள் விக்குப் பதிலளிக்கையிலையே நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து 2 ஆம் திகதி கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சந்தித்துக் கலந்துரையாடியதன் பின்னரே நிலைப்பாட்டு வெளிப்படுத்தப்படும். தற்போது பிரதமருக்கு எதிராகப் பொது எதிரணி கொண்டு வரும் இந்தப் பிரேரணை முதற் கட்டமாக நகர்த்தப்படுகின்ற காய். ரணிலைப் பிரதமராக வைத்திருப்பது எங்களுடைய நோக்கம் அல்ல.

ஆனால் கூட்டரசை எங்கள் சம்மதத்தோடும் முஸ்லிம் மக்களின் பங்களிப்போடும் அமைத்தோம். ஆனால் அந்த அரசு முன்னெடுத்த புதிய அரசமைப்பு உருவாக்கப் பணி அரைவாசியில் நின்றுகொண்டிருக்கிறது. இந்த நிலையில் கூட்டரசு விழுமாக இருந்தால் அந்த முயற்சி முற்று முழுதாகத் தடைப்படும். ஆனாலும் கூட்டரசு தொடர்ந்து இருந்தும் அந்தப் பணி நடக்குமா என்ற சந்தேகமும் இருக்கிறது.

ஆனாலும் 2015 ஆம் ஆண்டில் அனைத்து மக்களும் கொடுத்த ஆணையை நிறைவேற்றும் வகையில் இந்த அரசு தொடர்ந்து முன்னகருமாக இருந்தால் இந்த அரசை வைத்திருக்கும் தேவை எம் மக்களின் சார்பில் இருக்கிறது. இந்நிலையில் தற்போது பிரதமருக்கு எதிராகக் கொண்டுவரப் படவிருக்கும் பிரேரணை முதல் காய் நகர்த்தலாக இருந்தாலும் இறுதி ஜனாதிபதியைப் பதவி யிறக்குவது என்றும் எங்களுக்குத் தெரிகிறது.

ஆகையினால் இவை எல்லா வற்றையும் நாங்கள் ஆராய்ந்து கூட்டு அரசு இனியாவது காலத்தை இழுக்காது பொறுப்பு கூறல் மற் றும் அரசமைப்பு உருவாக்கம் சம்பந்தமாகத் தங்களது நிலைப் பாட்டை உறுதியாகத் தெரிவித்து தொடர்ந்து முன்னேறுவார்களாக இருந்தால் நாங்கள் இந்தக் கூட்டரசைத் தொடர்ந்து ஆட்சியில் வைத்திருக்க எங்களால் இயன்றதைச் செய்வோம்.

நாங்கள் இப்போது முதல் ஏப்ரல் 2 ஆம் திகதி வரையில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் இந்த விடயங்கள் குறித்து பேச்சுக்களை நடத்த உள்ளோம். அதன் போதுஅவர்கள் தங்களு டைய நிலைப்பாட்டைத் தெளிவாக அறிவித்த பின்னர் தான் கூட்டமைப்பு முடிவை எடுக்கும் – என்றார்.

(ஜ–7)

## பேச்சுத்திறன் காண் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்.மாவட்ட சர்வோதய நிறுவனத்தின் ஆதரவில் ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் நிர்வாகத்துடன் இயங்கும் ஆறுகால்மடம் அறிவொளி முன்பள்ளிச் சிறார்களின் பேச்சுத்திறன் காண் நிகழ்வு –

நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அறிவொளி சனசமூக நிலைய கலையரங்கில் சனசமூக நிலையத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகர சபை உறுப்பினர் எம்.எம்.எம்.நிபாஷிர், யாழ். கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் செல்வி ஜெகதாரணி சத்தியசீலன், கிராம அலுவலர் ர.சல்பீர், முன்பள்ளி ஆசிரியை செல்வி. சி.காத்தியாயினி ஆகியோர் கலந்து கொள்வர்.

## லக்கல – பல்லேகம புதிய நகரத்தின் 90 சதவீதமான பணிகள் பூர்த்தி

கொழும்பு, மார்ச் 29

லக்கல- பல்லேகம புதிய நகரத்தின் 90 சதவீதமான நிர்மாணப் பணிகள் பூர்த்தி அடைந்துள்ளன.

களுகங்கை நீர்த்தேக்கத்தினால் நீரில் மூழ்கும் பல்லேகம நகரத்திற்கு பதிலாக லக்கல புதிய நகரம் அமைக்கப்படுகிறது என்று மகாவலி அதிகார சபை அறிவித்துள்ளது.

## குழந்தையைக் கடத்திய வழக்கு:
## சி.ஐ.டி. பணிப்பாளருக்கு நீதிமன்று அழைப்பாணை

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தை கடத்தப்பட்ட குற்றச் சாட்டு வழக்கில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளரை நீதிமன்றில் முற்படுமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று கடந்த திங்களன்று உத்தரவிட்டது.

2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதக் காலப் பகுதியில் வல்வெட்டித்துறை கரணவாய் பகுதியைச்சேர்ந்தபெண்ணொருவர்பிரசவத்துக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் தமக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன என்றும், மகப்பேற்று நிபுணர்களின் உதவியுடன் தனது ஒரு குழந்தை கடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து அவரால் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைகள் நீண்ட காலமாகத் தொடர்ந்து இப்போது தற்போது யாழ்ப்பாணம் நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் வந்துள்ளது.

கடந்த வழக்குத் தவணையின்போது, இந்த வழக்கை குற் றப்புலனாய்வுப் பிரிவினருக்குப் பாரப்படுத்துமாறும் இது தொடர்பாகச் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுமாறும் நீதிவான் கட்டளை பிறப்பித்திருந்தார். எனினும் கடந்த திங்களன்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மன்றில் தோன்றவில்லை.

எனவே அடுத்த வழக்குத் தவணையின் போது பணிப்பாளரை நீதிமன்றில் தோன்றுமாறு நீதிவான் கட்டளை பிறப்பித்தார். (ஐ)

## இரணைமடுவிலிருந்து கிளிநொச்சிக்கு குடிதண்ணீர் விநியோகிப்பதில் நெருக்கடி



கொழும்பு, மார்ச் 29

இரணைமடு குளத்திலிருந்து கிளிநொச்சிக்கு குடிதண்ணீரை விநியோகிப்பதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நெருக்கடி நிலை எதிர்காலத்தில் மிகவும் மோசமான நிலையை அடையும் வாய்ப்பு உருவாகலாம் என்றும் சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சிக்கான குடிதண்ணீர் விநியோகம் என்பது இரணைமடு குளத்திலிருந்து கிளிநொச்சி குளத்திற்கு நீர் பெறப்பட்டு அங் கிருந்து நீர்வழங்கல்வடிகாலமைப்புச் சபையினரால் தண்ணீஸ் பெறப்பட்டு சுத்தி கரிக்கப் பட்டு தற்போது 14 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

தற்போது நாள் ஒன்றுக்கு 200 மீற்றர் கியூப் (200 ஆயிரம் லீற்றர்) நீர் பெறப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு விநியோகிக்கப் படுகிறது. வருகின்ற மாதம் இது நாளொன்றுக்கு 400 மீற்றர் கியூப் அளவாக மாறும் எனவும் இவ்வருட இறுதியில் அது ஆயிரம் மீற்றர் கியூப் அளவாக அதிகரிக்கும் எனவும் இறுதியில் கிளி நொச்சிக்கான குடிதண்ணீர் விநியோகப் பணிகள் பூர்த்தி செய்யப்படுகின்றபோது நாளொன்றுக்கு 3800 மீற்றர் கியூப் அளவாகக் காணப்படும் எனவும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இந்த நிலையில், தற்போது நிலவுகின்ற வறட்சியான கால நிலை காரணமாக இர ணைமடு குளத்திலிருந்து நாளொன்றுக்கு 200 மீற்றர் கியூப் நீரைப் பெற்றுக் கொள்வது என்பதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, சிறுபோக நெற்செய்கைக்கு பின்னரான காலத்தில் கிளிநொச்சிக் கான குடிதண்ணீரை இர ணைமடு குளத்திலிருந்து பெற்றுக் கொள்வதில் மிகவும் நெருக் கடி நிலை ஏற்படும் என்றும், குறிப்பாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நீரில் மக்கள் முழுமையாக நம்பி வாழுகின்ற நிலை ஏற்படுகின்றபோது அச்சந்தர்ப்பத்தில் இரணை மடுவிலிருந்தும் நீரை போதுமான அளவு பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகுமானால் அது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும்எனவும்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## துயர் துடைக்கும் சீடராவோம்




பாஸ்கா வாரம் எல்லோரும் இறை இயேசுவின் பாடுகள் மரணத்தை எண்ணி மனதுருகி இறை சன்னதியில் கூடி பிரார்த்திக்கும் நேரம் நற்செய்தி வழியாக ஆண்டவரே நீரோ, என் காலடிகளைக் கழுவப் போகிறீர்? என்று சீமோன் பேதுரு இயேசுவிடம் கேட்டார். இயேசு மறுமொழியாகே நான் செய்வது இன்னதென்று இப்போது உனக்குப் புரியாது பின்னரே புரிந்து கொள்வாய் என்றார். பேதுரு அவரிடம் "நீர் என் காலடிகளைக் கழுவ விடமாட்டேன்" என்றார். இயேசு அவரைப் பார்த்து "நான் உன் காலடிகளைக் கழுவா விட்டால் என்னோடு உனக்குப் பங்கு இல்லை" என்றார்.

இவை தலைவன் எப்படிப் பணியாளருடன் உறவைப் பலமாக்குவது என்பதை அடையாளமாக வெளிப்படுத்தினார். "நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவர்களுடைய காலடிகளைக் கழுவ கடமைப்பட்டிருக்கின்றீர்கள் நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரியாக காட்டினேன் என்றார் இயேசு.

இன்று எமது வாழ்வில் கால்கள் கழுவ முடியாவிட்டாலும் எமது நிலையில் உள்ள பணிகளை பிறருக்குச் செய்வதில் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயனுள்ளதாக்க முனைதலே நாம் வணங்கும் இறை தேடலுக்கு வெளிப்படும் செயலாகும். குடும்ப உறுப்பினர்களாக இருக்கும்போது என்னால் குடும்பம் மகிழ ஆன்மிக வழிபாட்டை வாழ்வாக்க பிறருடன் எமது செயல்களால், எமது தொடர்பாடலில் இனிமையான வார்த்தைகளால் எனது கடமை செய்யும் இடத்திலும் முன் மாதிரியான கிறிஸ்தவ சீடராய் வெளிப்படுத்தலும் பிறர்துயர் துடைக்கும் கால்கழுவும் இயேசுவின் முன்மாதிரி செயல்களாக எண்ணி செயற்படுவோம்.

இன்று எமது வழிபாடுகள் வெறும் சடங்கை சம்பிரதாயமாக இராது அர்த்தமூட்டும் செயல்களால் ஆண்டவனின் அன்பை பிறருக்கு பகிரும் சீடர்களாக புன்னகையுடன் முழுமனத்துடன் முன்மாதிரியானவராக வாழ இன்றே எம் வாழ்வை மாற்றுவோம்.

-யோசப்பாலா-

# மட்டு - இரத்மலானை விமான சேவை வாரத்தில் மூன்று தினங்கள் மட்டுமே

மட்டக்களப்பு விமான நிலையத்திற்கும் இரத்மலானை விமான நிலையத்திற்குமிடையில் முதல் கட்டமாக உள்ளூர் சிவில் விமானம் வாரத்தில் செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் இடம்பெறும்.

மட்டக்களப்பு விமான நிலையம் நவீனமயப்படுத்தப்பட்டு போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பமானது.

இதனையடுத்து முதலாவது சிவில் விமானம் நேற்றுமுன்தினம் காலை 11.15 க்கு இரத்மலானை




விமான நிலையத்திலிருந்து மட்டக்களப்பு விமானநிலையத்தை வந்தடைந்தது.

மட்டக்களப்புக்கும் - இரத்மலானை விமான நிலையத்திற்குமிடையில் ஒரு வழிக்கட்டணமாக 100 டொலர் அறவிடப்படும்.

மட்டக்களப்பு விமான நிலையத்திற்கும் இரத்மலானை விமான நிலையத்திற்குமிடையில் முதல் கட்டமாக பிளை சதர்ன் உள்ளூர் சிவில் விமானம் வாரத்தில் செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் சேவையில் ஈடுபடும் என மட்டக்களப்பு விமான நிலைய முகாமையாளர் சிந்தக்க பொன்சேகா தெரிவித்தார்.

காலை 9.00 மணிக்கு இரத்மலானை விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு காலை 10.00 மணிக்கு அது மட்டக்களப்பு விமான நிலையத்தை வந்தடையும். பின்னர் மட்டக்களப்பிலிருந்து மாலை 4.00 மணிக்கு புறப்பட்டு மாலை 5.00 மணிக்கு கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தை சென்றடையும் என்றும் முகாமையாளர் மேலும் தெரி வித்தார்.

பிரயாணிகளின் தொகைக்கு ஏற்ப ஏனைய விமானங்களையும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை பிரதேசசபையின் தவிசாளராக நௌஷாட் தெரிவு



சம்மாந்துறை,மார்ச் 29

சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த ஏ.ஆர்.எம்.நௌஷாட், பிரதித் தவிசாளராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த வி.ஜெயச்சந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறை பிரதேச சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது அமர்வில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் ஆகியோருக்காக இடம்பெற்ற வாக்கெடுப்பில், ஆளுங்கட்சியான மக்கள் காங்கிரஸ் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டுக்கு ஆதரவாக 12 வாக்குகள் கிடைத்தன. கூட்டுக்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த 8 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்தலைவர், அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கும், ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் உயர்மட்ட உத்தியோகத்தர்களுக்கும் இடையில் இடம் பெற்றபேச்சின்முடிவை அடுத்தே, சம்மாந்துறை பிதேச சபையில் இந்தக் கூட்டு உருவாக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 538 திட்டங்கள் முன்னெடுப்பு





மட்டக்களப்பு,மார்ச் 29

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த ஆண்டு ஆயிரத்து 538 திட்டங்கள் 43 கோடி ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தின் இந்த ஆண்டுக்கான பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் காலை முன்னாள் பிரதியமைச்சர் சோ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதன்போது, போரதீவுப்பற்று பிரதேசத்தில் எதிர்நோக்கப்படும் மக்களின் பிரச்சினைகள் மற்றும் யானைப் பிரச்சினை, குடிதண்ணீர் பிரச்சினைகள், வீடமைப்பு, வீதி அபிவிருத்தி பிரச்சினைகள், விவசாயம், நீர்பாசன பிரச்சினைகள் உட்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், பிரதேச செயலாளர் இ.இராகுலநாயகி மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் மக்கள் பிரதிநிதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் மட்டுமே பங்கேற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றஉறுப்பினர்சீ.யோகேஸ்வரனுக்கு முன் ஆசனம் வழங்கப்படாத நிலையில் வழமையாக மாகாணசபை உறுப்பினர்கள் அமரும் பகுதியில் இடம் வழங்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன்முறையாக அபிவிருத்திக்குழுக்கூட்டம்கட்சியொன்றின் அமைப்பாளரால் நடாத்தப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# சுவாமி விபுலானந்தரின் 126ஆவது ஜனன விழா



உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 126ஆவது ஜனன தின விழா காரைதீவில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் பணிமன்றத் தலைவர் வெ.ஜெயநாதன் தலைமையில் விபுலானந்த மணிமண்டபத்தில் நடைபெற்றது.

காரைதீவு விபுலானந்த சதுக்கத்திலுள்ள அடிகளாரின் சிலைக்கு மலர்மாலை அணிவித்தலுடன், ரதங்களின் ஊர்வலம் பாடசாலை மாணவர்களின் பங்குபற்றுதலோடு நடத்தப்பட்டது.

சுவாமியின் இல்லத்தில் விசேட பூஜை ஆராதனை மற்றும் திருவுருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்துதல் இடம்பெற்றமையைத் தொடர்ந்து மணிமண்டபத்தில் சிறப்பு நிகழ்வு களும் நடைபெற்றன.

மேலும், நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளர் பூ.சீவகன், காரைதீவு பிரதேச செயலாளர் க.லவநாதன், திருக்கோவில் பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# திருமலை விபத்தில் இளைஞன் பலி

திருகோணமலை,மார்ச் 29

திருகோணமலை - கந்தளாய் பிரதான வீதியின் 05ஆம் கட்டை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து வானொன்றும், மோட்டார் சைக்கிளும் மோதியதால் நேற்றுக் காலை நேர்ந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரே உயிரிழந்துள்ளார். அவர் அதே இடத்தை சேர்ந்த சமீர (30 வயது) எனத் தெரிவிக்கப்படுகிறது.

வானின் சாரதியை கைது செய்துள்ளோம் எனவும், உயிரிழந்த வரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கரடி தாக்கியதில் ஒருவர் படுகாயம்

கரடி தாக்குதலுக்கு உள்ளான இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் படுகாயமடைந்த நிலையில், நேற்று அதிகாலை கந்தளாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கந்தளாய் - வெந்தாசபுரம், யூனிட் பகுதியை சேர்ந்த 40 வயதான என்.ஏ. சஜித் நிஷாந்த என்பவரே சம்பவத்தில் படுகாயமைடைந்துள்ளார்.

பிரதேசத்திற்குள் கடந்த இரண்டு, மூன்று நாள்களாகச் சுற்றித்திரியும் கரடியை காட்டுக்குள் விரட்ட கிராமத்தை சேர்ந்த இளைஞர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

எனினும் கரடி திடீரென ஒருவரின் வீட்டிற்குள் புகுந்துள்ளது. வீட்டில் இருந்த ஏனையோர் வெளியில் ஓடி தப்பியுள்ளனர். எனினும் காயமடைந்தவர் வீட்டிற்குள் சிக்கிக்கொண்டுள்ளார்.

அவர் உயிர் தப்பிக்க கரடியுடன் போராடியுள்ளார். பின்னர், அயல்வாசிகள் பொல்லுகளால் தாக்கி கரடியை விரட்டியுள்ளார். இதனையடுத்து நேற்று அதிகாலை 5 மணிக்கு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# அடுத்த தேர்தலுக்கு முன் புதிய அரசு அதற்கான காய் நகர்த்தலே ஆரம்பமாம்



தினேஷ் குணவர்தன தெரிவிப்பு

அடுத்த தேர்தலுக்கு முன்னர் புதிய அரசு அமைப்பதை அடிப்படையாகக்கொண்டு நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

ஆகவே தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பித்துள்ளோம் என கூட்டு எதிர்க்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொஸ்கம பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்கள் அங்கீகாரமற்ற அரசே தற்போது ஆட்சியில் உள்ளது. எனவே அதனை பதவியிலிருந்து விலக்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டில் மேற்கொண்டுள்ள வேலைத்திட்டங்களை விடவும் அதிகமான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகக் கூறிக்கொண்டே நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்தது.

எனினும், மேற்கொண்ட வேலைத்திட்டங்கள் எனக் கூறிக்கொள்வதற்கு எதுவும் இல்லை. நாட்டின் பொருளாதாரம் மீதான நம்பிக்கை இழக்கப்படின் அதனை மீண்டும் கட்டியெழுப்புவது மிகவும் சிரமமான விடயமாகும். மீண்டும் நம்பகத் தன்மையை ஏற்படுத்துவதாக இருந்தால் புதிய அரசு அமைக்கப்பட வேண்டும்.

ஆகவேதான், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவிற்கு வாக்களித்துள்ளனர்.

மேலும், உள்ளூராட்சி மன்றங்கள் சிலவற்றில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சியமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் ஆதரவு வழங்கியுள்ளனர்.

ஏனெனில், ஐக்கிய தேசியக் கட்சி மீது நம்பிக்கைகொள்ள முடியாதென்பதை பிரதிநிதிகளும் அறிந்துகொண்டுள்ளனர். அதனால்தான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மீது நம்பிக்கை வைத்துள்ளனர்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பிரதியமைச்சர்களும் கையொப்பமிட்டுள்ளனர். பிரதமருக்கு அதிகாரமிருக்குமாயின் அவர்களை பதவியிலிருந்து நீக்கியிருக்க வேண்டும்.

எனவே நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றியடையச் செய்வதற்குத் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுகூடியுள்ளனர்.

ஆகவே அடுத்த தேர்தலுக்கு முன்னர் புதிய அரசை ஏற்படுத்துவதே தமது எதிர்பார்ப்பாகவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர்கள், எம்.பிக்கள் வெளிநாடு செல்லத் தடை!

கொழும்பு, மார்ச் 29

ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் 06 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் வெளிநாடு செல்கின்றமை தடைசெய்யப்பட்டுள்ளது எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 4 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள - பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோல்வியடையச் செய்வதற்கு வாக்களிக்கப்பட வேண்டியுள்ளதனால், இவர்களின் வெளிநாட்டுப் பயணம் இவ்வாறு ரத்து செய்யப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

தற்பொழுது, வெளிநாட்டுப் பயணத்தில் ஈடுபட்டுள்ளவர்களையும் நாடு திரும்பும் படி அறிவிக் கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதமன்று விசேட பாதுகாப்பு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை, விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதியன்று நாடாளுமன்றம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

இந்தத் தினத்தில் நாடாளுமன்ற பிரதேசத்திற்கு வருகை தரும் உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என நாடாளுமன்ற பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மேலதிகமாக பாதுகாப்பு வீரர்கள் இணைக்கப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவாதம் காலை 9 மணி முதல் இரவு 9.30 வரைஇடம்பெறவுள்ளது என நாடாளுமன்ற உதவிச் செயலாளர் குமாரி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

## கடலட்டை வளர்ப்பு தொடர்பான கருத்தரங்கு

ஐ.எல்.ஓ. நிறுவனத்தின் ஊடாகக் கடற்றொழிலாளர்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் கடலட்டை வளர்ப்புத் தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு புங்குடுதீவு புனித சவேரியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது என சங்கத்தின் தலைவர் வே.தவச்செல்வம் தெரிவித்துள்ளார்.

## 13 வருடகால கல்வி வேலைத்திட்டம்: முதலாவது கட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது



2017 ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட - 13 வருடம் உறுதிசெய்யப்பட்ட - கல்வி வேலைத்திட்டத்தின் முதலாவது கட்ட நடவடிக்கைகள் தற்போது பாடசாலையில் நடைபெற்று வருகின்றன.

இந்த திட்டத்தின் கீழ் 42 பாடசாலைகளை சேர்ந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மற்றும் சித்தி பெறத்தவறிய 2400 மாணவர்கள் இந்த கற்கை நெறிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இந்த வேலைத் திட்டத்தின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகளை இந்த வருடம்மேமாதம்ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக மேலும் 150 பாடசாலைகளை சேர்ந்த 14000 மாணவர்கள் தொழிற்கல்வியின் கீழ் கல்வி நடவடிக்கைகளுக்கு உள்வாங்கப்படவுள்ளனர்.

கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் தொலைநோக்கிற்கு அமைவாக இந்த கல்வித் திட்டம் முன்னனெடுக்கப்பட்டுள்ளது.இதற்குத் தேவையான ஆசிரியர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெறுகின்றன என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

2018 ஆண்டு மேமாதம் அளவில் 2 ஆயிரத்து 100 ஆசிரியர்கள் இதன்கீழ் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.தெரிவுசெய்யப்பட்ட 150 பாடசாலைகளில் 417 'ஸ்மாட் கிளாஸ்றூம்'களை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

13 வருட உறுதிசெய்யப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு நடைமுறைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

உலகிற்கு பொருத்தமான 26 தொழிற்கற்கை நெறிகள் பாடசாலைக்கல்வியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரச் சித்திபெற்ற அல்லது சித்திபெறத் தவறிய மாணவர்களுக்கு இந்த தொழிற்கல்வி கற்கை நெறியின் கீழ் 13 ஆண்டு உறுதி செய்யப்பட்ட பாடசாலைக் கல்வியைத் தொடர்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது.


இந்த வேலைத்திட்டத்திற்கு 2018ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தில் 350கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த 13 வருட உறுதிசெய்யப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தின் முக்கிய நோக்கம் உலகிற்கு பொருத்தமான நடைமுறை, செயல்முறைப் பயற்சியை கொண்ட தொழிற் கல்வியை தொடர்வதற்குப் பாடசாலைக் கல்வி மட்டத்திலேயே மாணவர்கள் ஈடுபடுத்துதலாகும். இதன் காரணமாக பிரஜை மற்றும் சமூகப் பொறுப்பை நிறைவேற்றக் கூடிய செயற்றிறன் மிக்கதும் பயனுள்ளதுமான மனித வளத்தை இந்த நாட்டில் உருவாக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

## இலங்கை இராணுவ புதிய தலைமை அதிகாரி நியமனம்

கொழும்பு, மார்ச் 29



இலங்கை இராணுவத்தின் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் தம்பத் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 52ஆவது இராணுவ தலைமை அதிகாரி ஆவார்.

## பெண்ணின் சடலம் மீட்பு

கொழும்பு, மார்ச் 29 கம்பளைஅம்புலுவ பிரதேசத்திலுள்ள கிணற்றிலிருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இந்தச்சடலம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பளை, சாலியாவத்தையைச் சேர்ந்த 42 வயதுடைய பெண்ணொருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கம்பளை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள் ளது.

மேலதிக விசாரணைகளைகம்பளைப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வைத்தீஸ்வரன் ஆலயப் பஞ்சரதப் பவனி இன்று

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய பஞ்சரதப் பவனி இன்று நடைபெறவுள்ளது. காலை 7.30 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப்பூசையைத்தொடர்ந்து காலை 9 மணிக்கு விநாயகர், முருகன், அம்பாள், வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர், சண்டேசர் ஆகிய பஞ்ச மூர்த்திகளும் தேர்களில் ஆரோகணித்து வீதி வலம் வரவுள்ளனர்.

ஆலய முன்றிலிலிருந்து காங்கேசன்துறை வீதி வழியாகப் புறப்பட்டு ஐந்து ரதங்களும் மானிப்பாய் வீதி, சிவன் வடக்கு வீதி வழியாக ஆலயத்தை அடைந்து பஞ்சமூர்த்திகளும் தேரிலி ருந்து பி.பகல் 1 மணியளவில் அவரோகணமாகி ஆலயம் சேர்வர்.

நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.

# தினசரி ராசி பலன் (29.03.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பிவருடம் பங்குனித்திங்கள் 15 ஆம் நாள் வியாழக்கிழமை திரயோதசித்திதி இரவு 9.23 மணி வரை பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம்: மகம் காலை 8.39 மணி வரை பின்னர் பூரம். அமிர்தசித்தயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *பகல் 1.46 மணி முதல் 3.17 மணி வரை*

**சுபநேரம்** - *காலை 7.36 மணி முதல் 9.07 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *பங்குனி மாத வளர்பிறை திரயோதசி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *பூரம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப நிலையில் குதூகலம் நிரம்பிக் காணப்படும். பெண்கள் குடும்ப நிர்வாகத்தால் மிகச் சிறப்பாக இயங்கி நற்பெயர் பெறுவார்கள்.

**ரிஷபம்** சலனம் மிகுந்த நாள். மனக்குழப்பம் அதிகரிக்கும். பணவரவு குறையும். நண்பர்கள் உறவினர்களுடன் பகைமை உண்டாகும். வியாபரம் மந்தநிலையில் நடக்கும்.

**மிதுனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். வியாபாரம் குறைந்த பட்ச லாபத்தில் நடைபெற்று வரும். பயணத்தின் போது கவனம் தேவை.

**கடகம்** இன்பமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடக்கும். விட்டுப் பிரிந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்பு உண்டாகும்.

**சிம்மம்** அனுகூலமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப நிலையில் சமரசமான போக்குக் காணப்படும். நினைத்த காரியம் நிறைவேறும். கோபமாய் இருந்தவர்கள் நட்புடன் பழகுவார்கள்.

**கன்னி** யோசனையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் சச்சரவுகள் உண்டாகும். உறவினர்களுடன் விரிசல் உண்டாகும். தொழிலில் பாடுபட்டதன் பயன் குறையும். சகோதர வழியால் செலவுகள் உண்டாகும்.

**துலாம்** சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சியால் சுபீட்சம் உண்டாகும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**விருச்சிகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். வியாபாரம் போட்டிகளுக்கிடையில் சுமாரான லாபத்தைத் தரும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**தனுசு** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரிக்கும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். செய்யும் தொழிலில் மேன்மை உண்டாகும்.

**மகரம்** துன்பமான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். தாய், தந்தையரைப் பற்றிய கவலை உண்டாகும். தொழிலில் பல இடையூறுகள் உண்டாகும்.

**கும்பம்** விருத்தியான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடைபெறலாம். வியாபாரம் சுறுசுறுப்பாக நடக்கும். சுயதொழில் விருத்தியடையும்.

**மீனம்** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்ப உறவு மேம்படும். வியாபாரிகளுக்கு சிறப்பான முறையில் வியாபாரம் அமோக லாபத்தைத் தரும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி நிலவும்.

**சந்திராட்டம நாள்: உத்தராடம் 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# கண்டியில் வன்முறைகள் புரிந்து கைதானோர் ராஜபக்ஷவாதிகள்!

## அடித்துக் கூறுகிறார் சம்பிக்க

கொழும்பு, மார்ச் 29

கண்டி வன்முறை சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்களுள் பெரும்பாலானோர் ராஜபக்ஷ வாதிகள் என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

ஜாதிகஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பொன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கண்டிச் சம்பவத்தின் பின்னணியில் ஜாதிக ஹெல உறுமயவே செயற்பட்டதாக ராஜபக்ஷக்கள் நாடாளுமன்



றம் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் பகிரங்கக் குற்றச்சாட்டு முன்வைத்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து இது குறித்து முழுமையான விசாரணை நடத்தி உண்மைகளை வெளிப்படுத்துமாறு நாம் பொலிஸாரைக் கோரியிருந்தோம். அதற்கமைய விசாரணைகள் மும்முரமாக இடம்பெற்றுள்ளன.

அதற்கமைய பல்வேறு ஆதாரங்களை மையமாகக் கொண்டு கைது செய்யப்பட்டவர்களுள் பெரும்பாலானோர் ராஜபக்ஷ வாதிகள் என்பதை கூறிக்கொள்கிறேன்.

அதேவேளை, எமது கட்சியுடன் தொடர்புடைய எந்தவொரு நபரும் எவ்வித வன்முறை சம்பவங்களுடனும், எந்த விதத்திலும் தொடர்புபடவில்லை என்பதும் விசாரணைகளில் உறுதியாகியுள்ளது.

வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் தொடர்பான விவரங்களை நாடாளுமன்றில் பகிரங்கப்படுத்துமாறும் பொலி ஸாரிடம் நாம் கோரி நிற்கின்றோம் என்றார்.

(ஐ)

# நீர் வீண்விரயமாவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு , மார்ச் 29

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு ஊடாக புதுக்குடியிருப்பு செல்லும் வீதியில் அமைக்கப்பட்டுள்ள குழாய்க் கிணற்றிலிருந்து பெருமளவு நீர் வெளியேறி வீணாகி வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீர் ஊற்று கூடிய இந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்ட நாளிலிருந்தே நீர் வீணாக வெளியேறுகின்றது எனவும்



தெரிவிக்கப்படுகிறது.

நீரை வீண்விரயம் செய்ய வேண்டாம் எனத் தெரிவிக்கும் அரசு இவ்வாறு நீர் வீணாவதை உடனடியாக நிறுத்த வேண்டும் எனச் சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு குழாய்க் கிணறு மூலம் நிலத்தடி நீர் வீணாகும் போது எதிர்காலத்தில் குறித்த பகுதிக் கிணறுகளிலும் நீர் இல்லாது போய் தாம் பெரிதும் பாதிக்கப்படலாம் என அயலவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனவே இந்த விடயத்தை உரியவர்கள் கவனத்தில் கொண்டு நீர் விரயமாவதைத் தடுக்க முன்வருமாறு கோரப்படுகிறது. (க - 70)

# டெங்கைக் கட்டுப்படுத்த புதிய செயலி அறிமுகம்!



இலங்கையில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய வகை செயலி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு இடையில் டெங்கு நோய் தொற்று பரவுவதைத் தடுக்கும் வகையில் கையடக்கத் தொலைபேசி செயலி (App) வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

டெங்கு நோயற்ற பிள்ளைகள் (Dengue Free Child) என்ற பெயரில் இந்த செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு, கொழும்பு பல்கலைக் கழகம், சிங்கப்பூர் நன்வங் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் இணைந்து இதனை தயாரித்துள்ளது.

இந்தச் செயலி டெங்கு நோய் மற்றும் சந்தேகத்திற்கிடமான முறையில் காணப்படும் காய்ச்சலைக் கண்டு பிடிக்க உதவுகின்றது.

இந்தச் செயலி டெங்கு தொற்று ஏற்படக்கூடிய பிரதேசங்களை கண்டு பிடித்து துப்புரவு செய்வதற்கும், அதனை அழிப்பதற்கும் உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய செயலியை பயன்படுத்துவதன் மூலம் டெங்கு நோய் தொற்று தொடர்பான பிரதேசங்களில் பெற்றோர் மற்றும் பிள்ளைகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என நம்பப்படுகின்றது.

# நிர்வாகத் தெரிவு

வரணி வடக்கு மருத்துவ மனையின் நோயாளர் நலன்புரி சங்கத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நலன்புரி சங்கத்தின் தலைவராக மருத்துவர் சுதந்திரதன், செயலாளராக விஷ்ணுகாந்தன், பொருளாளராக ஆ.மகேந்திரன், உபசெயலாளராக இராஸமோகன், உபதலைவராக செ.நவரட்ணசாமி ஆகியோரும் சபையின் உள்ளகக் கணக்காய்வாளராக த.நடராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக மருத்துவமனைப் பிரதேசத்தை ஆளுமையாகக் கொண்டிருக்கும் சகல கிராம அலுவலர்கள் பிரிவில் இருந்தும் தலா இருவர் வீதமும் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மகோற்சவம் ஆரம்பம்

வட்டுக்கோட்டை, மார்ச்29

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி உறையும் வீரபத்திரசுவாமி சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய பங்குனி மாத உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இந்த ஆலய மகோற்சவம் பன்னிரண்டு தினங்கள் நடைபெறுவதுடன் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

# முல்லையில் 'மாயபுர' என்ற பெயரில் சிங்களக் குடியேற்றத்துக்கு ஏற்பாடாம்

## விசேட விவாதம் நடத்தி ஆராய வடக்கு மாகாண சபை முடிவு

(எஸ்.நிதர்சன்)

முல்லைத்தீவு, மார்ச் 29

முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி அதிகாரசபை தனது செயற்றிட்டப் பகுதியை விரிவாக்குவதன் ஊடாக மாயபுர என்ற பெயரில் பெருமளவு சிங்களக் குடியேற்றம் ஒன்றுக்குத் திட்டமிடுவதாக நேற்று முன்தினம் வடக்கு மாகாணசபையில் சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவி கரன் இதனைத் தடுத்து நிறுத்தவும் தமிழர் எல்லைப் பகுதிகளில் தமிழர்களின் இருப்பை நிலை நாட்டவும் எல்லோரும் அணிதிரள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதற்கமைய மேற்படி மாயபுர சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்தி தமிழ் மக்களின் எல்லைப் பகுதிகளில் தமிழர்களின் இருப்பை நிலை நாட்டும் வகையில் மாகாண சபையில் விசேட அமர்வொன்றை நடத்துவதற்கும் அதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 119 ஆவது அமர்வு கைதடியிலுள்ள மாகாண பேரவைச் செயலகத்தில் பேரவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போது, முல்லைத் தீவு மாவட்டத்தில் மகாவலி எல் வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதிகளில் மாகா வலி அதிகார சபை பெரிய சிங்களக் குடியேற்றத்துக்கு முயல்கின்றது, இது விடயமாகப் பல தடவைகள் சபையிலும் சுட்டிக்காட்டி இருந்தாலும் தற்போது இந்த விடயம் விஸ்வரூபம் எடுத்து இந்த முயற்சிகள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன என சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் து.ரவிகரன் கவனவீர்ப்புப் பிரேரணையொன்றை சபைக்குக் கொண்டு வந்திருந்தார்.

இந்தப்பிரேரணையைக்கொண்டு வந்து ரவிகரன் உரையாற்றுகையில் –

மகாவலி அதிகாரசபை தனது செயற்றிட்டப் பகுதியை விரிவாக்குவதன் ஊடாக மாயபுர என்ற பெயரில் பெரிய சிங்களக் குடியேற்றம் ஒன்றுக்கான முயற்சிகளை மேற்கொண்டிருக் கின்றது. இதன் ஊடாகக் கொக்கிளாய், கொக்குத் தொடுவாய்,கருணாட்டுக் கேணி மற்றும் நாயாறு பகுதிகளில் உள்ள தமிழ் மக்களின் காணிகளில் சிங்கள மக்களை குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இதன் மூலம் சுமார் 7 ஆயிரம் தமிழ் மக்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. மேலும் கரைதுறைப் பற்றுபிரதேசசெயலர் பிரிவில்வாழும் சிங் கள மக்களை வெலிஓயா என அழைக்கப்படும் தனிசிங்களப் பிரதேச செயலர் பிரிவுடன் இணைப்பதற்கும் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. இதனால் பெரும் பாதிப்பு உண்டாகப் போகிறது. – எனச் சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் கருத்துத் தெரிவிக்கையில் –

இந்த விடயம் ஒரு பாரதூரமான விடயமாகும். இந்த விவாதம் தொடர்பாக அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

தொடர்ந்து மாகாண சபைஉறுப்பினர் த.குருகுலராஜா கருத்துத் தெரிவிக்கையில் – மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் இந்தவிடயம் தொடர்பாகத் தொடர்ந்தும் பேசிவருகின்றார். ஒரு தடவை இது தொடர்பாகப் பேசும்போது மாகாண சபை உறுப்பினர்களை முல் லைத் தீவு மாவட்டத்துக்கு வருமாறு அழைத்திருந்தார். ஆனாலும் மாகாணசபை உறுப்பினர்கள் எவரும் செல்லவில்லை. இந் நிலையில் இந்த மாயபுர என்றபெய ரில் மேற்கொள் எப்படவுள்ள பெரிய சிங்களக் குடியேற்றம் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு விசேட அமர்வு ஒன்றை நடத்த வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்தவிடயம் தொடர்பாகச் சுட்டிக்காட்டி அவர்கள் மூலமும் மத்தியில் அர சுக்குஅழுத்தம் கொடுக்கச் செய்யவேண்டும். – என்றார்.

இதற்கமையவிசேடஅமர்வு ஒன்றை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்படும் எனஅவைத் தலைவர் சிவஞானம் அறிவித்தார்.



நேற்றுமுன்தினம் இரவு வரலாற்று சிறப்புமிக்க யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரப் பெருமான் – வலாம்பிகாதேவி சமேதராக சப்பறத்தில் அழகிய வீதியுலா வரும் காட்சி.

படங்கள் – கி.வே.கிருஷ்ணா

# மஸ்கெலியாவில் பெரும் பதற்றம்; பிரதேச சபை இ.தொ.கா. வசமானது






கண்டி, மார்ச் 29

பெரும் பதற்றங்களின் மத்தியில் கண்டி மஸ்கெலியாவில் பிரதேச சபை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வசமாகியுள்ளது.

மஸ்கெலியா பிரதேச சபையின் தலைவியாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பெண் வேட்பாளரான கற்பக வள்ளி தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு உதவித் தலைவராகப் பெரியசாமி பிரதீபன் நியமிக்கப்பட்டுள்ளார் .

மஸ்கெலியாப் பிரதேச சபைக்கான தலைவர் தெரிவு நடவடிக்கையின்போது அங்கு பதற்றமான நிலை தோன்றியிருந்தது.

அந்தச்சபைக்குத்தெரிவுசெய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பெண் உறுப்பினர் ஒருவர் சபைக்கு வருகை தரவில்லைஎன்பதுடன், இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்கள் அவரை மறைத்து வைத்துள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியதைத் தொடர்ந்து அங்கு குழப்ப நிலை ஏற்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியினைச் சேர்ந்த உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்து தமது எதிர்ப்பினை வெளிக்காட்டினர். இதனைத் தொடர்ந்து சபைத் தலைவரைத்தெரிவுசெய்வதற்கானவாக்கெடுப்பு இடம்பெற்றது

இந்த வாக்கெடுப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் கற்பகவள்ளி தலைவராகவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் பெரியசாமி பிரதீபன் உபதலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

அதனை, தொடர்ந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்கள் ஊர்வலம் செல்ல முற்பட்டதனையடுத்து இருசாராருக்குமிடையில் வாய் தர்க்கம் ஏற்பட்டு பின் அது கல்வீச்சாக மாறியது.

இந்தக் கல்வீச்சில் சிலர் சிறிய காயங்களுக்கு உள்ளான துடன் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கல்வீச்சின் காரணமாக பொது போக்குவரத்து தடைபட்டதுடன் வாகன நெரிசல் நிலையும் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து ஏனைய பொலிஸ் நிலையங்களிலிருந்து பொலிஸார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

இந்த கல்வீச்சு சம்பவங்களில் இரு கட்சிகளினதும் அரசியல் பிரதிநிதிகளும் ஈடுபட்டனர் என பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். இது குறித்து மஸ்கெலியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(கு)

# பாடசாலையில் கைவரிசையை காட்டிய திருடர்கள்!

மட்டக்களப்பு – அருணோதய வித்தியாலயத்தின் வகுப்பறைகளின் கதவுகள் உடைக்கப்பட்டு, மாணவர்களின் உண்டியல் பணம் திருடப்பட்டுள்ளது எனப் பாடசாலை அதிபர், மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்துள்ளார்.

அடையாளம்தெரியாத நபர்களால் நேற்று அதிகாலை பணம் திருடப்பட்டுள்ளது எனப் பாடசாலை அதிபர் சுபாஷினி ரவிதேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் தெரிவிக்கையில், பாடசாலைக்கு வருகை தந்த ஆசிரியர்களும், மாணவர்களும் நேற்றுக் காலை வகுப்பறைகளுக்குச் சென்றபோது வகுப்பறைகளின் கதவுகள் உடைக்கப்பட்டு, வகுப்பறைகளில் உள்ள அலுமாரிகள் உடைக்கப்பட்டு அவற்றில் வைக்கப்பட்டிருந்த உண்டியல்கள் திருடப்பட்டுள்ளன.

குறித்த உண்டியல்களில் மாணவர்களின் சேமிப்புக்காக வங்கியால் வழங்கப்பட்டு, மாணவர்களால் சேமிக்கப்பட்ட பணம் இருந்தது.

பாடசாலையில் தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையில் சுமார் 375 மாணவர்கள் கல்வி கற்கும் வேளையில் கடந்த காலங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையில் மீண்டும் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளது

பாடசாலைக்குப் பாதுகாப்பான சுற்றுமதில்கள், இல்லாமையாலும், இரவு நேர காவலாளி இல்லாத காரணத்தினாலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக் காரணமாக உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும்,சம்பவம்தொடர்பாக மட்டக்களப்புப் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மட்டு. சுற்றுலா வளர்ச்சிக்கு மூலோபாயச் செயற்றிட்டம்



மட்டக்களப்பு, மார்ச் 29

மட்டக்களப்பில் சுற்றுலா வளர்ச்சிக்கான மூலோபாயச் செயல் திட்டம் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர் சந்திம வீரக்கொடி மற்றும் ஆஸ்திரேலியாவின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான அபிவிருத்தி ஒத்துழைப்புத் தலைவர் விகடோரியா கொக்லே ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தநிகழ்வுமட்டக்களப்புஈஸ்ட்லகூன் உல்லாசவிடுதியில் நேற்று இடம்பெற்றது.

இந்த ஆரம்ப நிகழ்வில் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் சந்திரசிறி, மாவட்ட அரசாங்க அதிபர் எம். உதயகுமார், உள்வாங்கல் வளர்ச்சிக்கான ஆற்றல் நிறுவனத்தின் சந்தைப் படுத்தல் மற்றும் தொடர்பாடல் அதிகாரி சந்துனி ஸ்ரீபால, மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் மரினா உமேஸ் உள்ளிட்ட பல அதிகாரிகளும், சுற்றுலாத் துறை சார்ந்தோரும் கலந்து கொண்டனர்.

# கூட்டமைப்பின் இரட்டை நிலைப்பாட்டால்தான் கைதிகள் விடுவிப்பு சாத்தியமற்றுப் போகின்றது

## சிவசக்தி ஆனந்தன் குற்றச்சாட்டு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரட்டை நிலைப்பாடும், அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கிய அதன் போக்கும்தான் அரசியல் கைதிகளின் விடுதலையை வென்றெடுக்க முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளன என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

ஆயுள் தண்டனை பெற்ற அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்தசுதாகரனின் விடுதலை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

அண்மையில் கிளிநொச்சியில் இறந்த – ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியின் – மனைவியினுடைய மரண இறுதிச்சடங்கில் ஏற்பட்ட சம்பவம் ஒட்டு மொத்த மனிநேயமுள்ள அனைவருக்கும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்தசுதாகரனின் இரண்டு குழந்தைகளில் ஒரு குழந்தையாகிய மகன் தாயாருடைய உடலைத் தகனம் செய்வதற்காகவும் மற்றைய குழந்தையான மகள் ஆயுள் தண்டனை பெற்ற அரசியல் கைதியாகிய தனது தந்தையுடன் சேர்ந்து பொலிஸாருடைய வாகனத்தில் ஏறிச் செல்லவும் முயன்ற சம்பவம் ஒட்டுமொத்தமாக மனிதநேயமுள்ள அனைவரையும் உலுக்கிப்போட்டுள்ளது.

ஆகவே, இந்த அரசியல் கைதிகளின் விடுதலை விரைவுபடுத்தப்பட வேண்டும். இறுதி யுத்தம் முடிவடைந்து ஒன்பது வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் இலங்கையில் பல்வேறுபட்ட சிறைச்சாலைகளில் 110 இற்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் உள்ளனர். அவர்கள் தங்கள் விடுதலை தொடர்பாக நீண்ட காலமாகப் பல்வேறுபட்ட சாத்வீகப் போராட்டங்கள், உண்ணாவிரதம் எனப் பல போராட்டங்களைச் செய்துள்ளனர்.

அரசியல் கைதிகள் தொடர்பாக ஜனாதிபதியின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் இந்த உண்ணாவிரதத்தை முடித்து வைத்து உங்களை ஆறுமாத காலத்திற்குள் விடுதலை பெற்றுக் கொடுப்பேன் என்று கூறியும் இன்று இரண்டு வருடங்கள் கடந்துவிட்டன. அரசியல் கைதிகளின் விடுதலை ஒரு தொடர்கதையாகச் சென்று கொண்டிருக்கிறது.

இது, அரசியல் கைதிகளுக்கு மாத்திரமல்ல, அவர்களின் உறவுகள், குடும்பம், அவர்களின் பிள்ளைகள் என அனைவர் மத்தியிலும் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையிலுள்ள சட்டத்தினூடாகவோ அல்லது சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாகவோ இந்தக் கைதிகளின் விடுதலை என்பது இயலாத விடயமாகவே இருக்கிறது. ஓர் அரசியல் கைதிக்கு எதிராக ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகள் போடப்பட்டுள்ளன. ஒவ்வொரு வழக்கிற்கும் ஐந்து வருடம், எட்டு வருடம் என்று தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் இந்த அரசியல் கைதிகளின் விடுதலைக்காக விசேட நீதிமன்றம் அமைக்கப்பட்டு அந்த நீதிமன்றத்தினூடாக இந்த வழக்குகள் துரிதமாக விசாரிக்கப்படும் என்று சொன்னாலும் கூட உண்மையில் அந்த விசேட நீதிமன்றங்களினூடாக எந்த அரசியல் கைதிகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாறாக இந்த நீதிமன்றங்களின் ஊடாக இலங்கையில் இருக்கக் கூடிய சமூக விரோதிகளே விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

அதே போல் ஒவ்வொரு வருடமும் சுதந்திர தினத்தில் ஜனாதிபதியால் பொது மன்னிப்பின் மூலம் நூற்றுக் கணக்கான கைதிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள். அவர்கள் முழுக்க முழுக்கச் சிங்களவர்களாக இருக்கிறார்கள், இச்சிங்களக் கைதிகள் போதைப்பொருள் மற்றும் கற்பழிப்புப் போன்ற குற்றங்களை செய்த சமூக விரோதிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கே ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்கிறார்.

உண்மையில் இந்த நாட்டில் அரசியல் ரீதியாக ஏற்பட்ட பிரச்சினை காரணமாகத்தான் இப்போது அரசியல் கைதியாக இருப்பவர்கள் ஆயுதம் தூக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டார்கள். இந்த நாட்டை ஆட்சி செய்த ஒவ்வொரு தலைமையும் தமிழ் மக்களை இரும்புக் கரம் கொண்டு அடக்கியதன் விளைவாகத் தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டார்கள். தமிழ் மக்களுடைய விடுதலைக்காக, தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைகளுக்காகத் தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்கினார்கள். தங்கள் தனிப்பட்ட தேவைகளுக்காகத் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்கவில்லை.

யுத்தம் முடிவடைந்து ஒரு தரப்பு சந்தேகத்தின் அடிப்படையில் நீண்ட காலமாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அதே நேரத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலை, கைதுகள், கடத்தல்கள், கப்பம் வாங்கியமை தொடர்பான ஒரு சில வழக்குகள் நீதி மன்றத்திற்கு வந்தும் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இன்னும் பல கொலைகளுடன் சம்பந்தப்பட்ட படையினர் எந்தவிதமான விசாரணைக்கோ, தண்டனைக்கோ உட்படுத்தப்படவில்லை. ஆகவே யுத்தம் முடிவடைந்த பின்னர் ஒரு தரப்பை மாத்திரம் சிறைக்குள் அடைத்து வைத்துக் கொண்டு, நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும், நம்பகத்தன்மையை கட்டமைக்க வேண்டும் என்று ஜனாதிபதி வடக்கிற்கு வரும்போது வார்த்தை ஜாலங்களால் தன்னுடைய கருத்தை தெரிவிக்கிறாரே ஒழிய நடைமுறையில் ஒன்றுமில்லை.

2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டுத் தமிழ் மக்களுடைய வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதி கடந்த மூன்று வருடங்கள் குறைந்தபட்சம் நல்லெண்ணத்தை, நம்பிக்கையை கட்டியெழுப்ப இந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்திருக்கலாம். அல்லது இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவித்திருக்கலாம். காணாமற் செய்யப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் ஒரு வருடமாக நீடித்துக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கும் ஒரு பதிலையும் சொல்லவில்லை.

எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாத அரசுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் உட்பட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த மூன்று வருடகாலம் தங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் பதவி, குழுக்களின் பிரதித் தலைவர் பதவி, மாவட்ட அபிவிருத்தி குழுக்களின் தலைவர் பதவிகளுக்காகவும், அரசாங்கம் போடுகின்ற எலும்புத் துண்டுகளுக்காகவும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி வருகின்றனர். வரவு – செலவுத்திட்டத்தை ஆதரித்தமையோடு ஐ.நா.சபையில் இலங்கைக்குக் கால நீடிப்பை கொடுப்பதற்கும் கையெழுத்திட்டுக் கடிதம் அனுப்பியிருந்தனர்.

இறுதியாக நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமை நாட்டிற்கு உகந்தது இல்லை எனத் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா சொல்கிறார். ஆனால், இதே உள்ளூராட்சித் தேர்தல் சட்டம் 60 இற்கு 40 என்ற ரீதியில் வட்டார, விகிதாசாரப் பிரதிநிதித்துவத்துடன் நாடாளுமன்றத்துக்கு வந்தபோது அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தான் முன்னின்று ஆதரவு வழங்கியவர்கள். அதேபோல் மாகாணசபை திருத்தச்சட்டம் ஐம்பதுக்கு ஐம்பது வரும் போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதற்கு ஆதரவு வழங்கியவர்கள்.

நாடாளுமன்றத்திலே தமிழ் மக்களுக்கு விரோதமான சட்ட மூலங்கள் வரும்போது கண்ணை மூடிக்கொண்டு ஆதரவு வழங்குவதுடன் அதற்கு சொல்லப்படும் விளக்கம் இந்த அரசாங்கம் மூன்றில் இரண்டு பலத்தோடு இருக்கிறது என்பதை நாங்கள் நிரூபிக்க வேண்டும் என்பதாக இருக்கும்.

இறுதியாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சட்டத் திருத்தங்கள் கூடக் கொண்டு வரப்பட்டன அப்போது தமிழரசுக் கட்சி சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் காலையில் சட்டத்தை எதிர்த்து மிக ஆவேசமாகப் பேசினர். ஆனால், மாலையில் வாக்கெடுப்பு நடத்தும் போது அதற்கு ஆதரவாக வாக்களிக்கிறார்கள்.

ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரட்டை நிலைப்பாடும் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை அது வழங்கியமைதான் அரசியல் கைதிகளின் விடுதலையை வென்றெடுக்க முடியாதுள்ளமைக்கு காரணம்.

ஆகவே, இந்த நிலைமையில் இருந்து விடுபட வேண்டுமானால் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கக் கூடிய அளவிற்கு ஒரு பலமான ஐக்கிய முன்னணியை உருவாக்க வேண்டிய தேவையிருக்கின்றது. அந்த ஐக்கிய முன்னணி தற்போதுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய தமிழரசுக்கட்சி தன்னுடைய கட்சியை முன் னிறுத் துவதற்கு அல்லது தனது கட்சி சார்ந்தவர்களுக்குப் பதவிகளையும் பணத்தையும் பெற்றுக் கொள்வதற்கு எடுக்கும் நடவடிக்கை களுக்கு அப்பாலானதாக அமைய வேண்டும். தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் ஒரு பலமான சக்திவாய்ந்த ஜனநாயக போராட்டங்களை முன்னெடுப்பதற்காகவும், ஒரு பலமான கட்டமைப்பை உருவாக்கி அதனூடாக இலங்கை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் அழுத்தம் கொடுக்க முடியும். – என்றார்.

## முன்னாள் போராளிகள் 97 பேருக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பு!

புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களின் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் தனியார் துறையில் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்கீழ் புனர்வாழ்வளிக்கப்பட்டுச் சமூகமயப்படுத்தப்பட்ட முன்னாள் போராளிகள் 97 பேருக்கு தனியார் துறையில் தொழில் வாய்ப்பிற்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா பூந்தோட்ட புனர்வாழ்வு நிலையத்தில் அதன் பணிப்பாளர் நாயகம் டிமிந்த பெஸ்குவல் தலைமையில் இது தொடர்பான நிகழ்வு நடைபெற்றது.

புனர்வாழ்வளிக்கப்பட்ட காலப்பகுதியில் இலங்கை தொழில் வாய்ப்பு அதிகாரசபையின் மூலம் நடத்தப்பட்ட பயிற்சிக் கற்கை நெறிகளை அடிப்படையாகக் கொண்டு தனியார் துறையில் இவ்வாறு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மருதானையில் அமையும் தேசிய ரயில் நூதனசாலை



கொழும்பு, மார்ச் 29

பல்வேறு தரப்பினருக்கும் நன்மை பயக்கும் வகையில் மருதானையில் அமைந்துள்ள வரலாற்று முக்கியத்துவம் மிக்க கொழும்பு வலயத்துக்குரிய ரயில் நிலையத்தில் ‘இலங்கை தேசிய ரயில் நூதனசாலையை’ ஸ்தாபிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத மணல், கல் விற்பனையை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 29

நாட்டில் சட்ட விரோதமான முறையில் மேற்கொள்ளப்படும்மணல்,கல் விற்பனையை தடுக்க உடனடி நட வடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

புவிச்சரிதவியல் அளவை மற்றும்சுரங்கப்பணியகத்தின் வெள்ளி விழா நேற்று முன் தினம்பிற்பகல்பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாம் வாழும் இந்தப் பூமியையும் இயற்கை மற்றும் ஜீவராசிகளையும் நேசித்து அவற்றை வளப்படுத்திப் பாதுகாக்கின்ற முக்கிய பொறுப்பு புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப்பணியகத்திற்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கும் உரியதாகும்.

இந்த இரண்டு நிறுவனங்களும் இணைந்து பணியாற்ற வேண்டியது அவசியமாகும்.

அண்மையில், முத்துராஜவெல பிரதேசத்தில் இடம் பெற்ற சுற்றாடல் அழிவுகள் குறித்து கவனத்தில் எடுக்க வேண்டும்.

மோசடி வியாபாரிகளிடமிருந்து சுற்றாடலைப் பாதுகாப்பதற்குஅரசநிறுவனங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதன் பின்னர் இந்தத் திட்டம் எவ்வாறு நடைமுறைப் படுத்தப் படுகின்றது என்பது பற்றி தேடிப்பார்ப்பது முக்கியமான பொறுப்பாகும்.

புவிச்சரிதவியல் துறையில் அகழ்வு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை புதிய தொழில்நுட்பத்துடன் முறையாகவும் வினைத்திறனாகவும் நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

புவிச்சரிதவியல் அளவை சுரங்கப்பணியகத்தில் சேவை செய்து ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கும் தற்போது அதிக காலம் சேவையில் இருக்கின்ற ஊழியர்களுக்கும் ஜனாதிபதியினால் இதன்போது அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, பிரதி அமைச்சர் அநுராத ஜயரத்ன, முன்னாள் அமைச்சர் அத்தாவுத செனவிரத்ன, புவிச் சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தின் தலைவர் அசேல இத்தவெல ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கொழும்பில் அதிசய கிணறு!



கொழும்பு, மார்ச் 29

கொழும்பில் அதிசயிக்கத்தக்க வகையில் வறட்சிக் காலத்திலும் வற்றாத கிணறு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கு அருகில் இந்தக் கிணறு அமைந்துள்ளது.

எனினும், இந்தக் கிணறு பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது. மாநாட்டு மண்டபத்திற்கு அருகில் அமைந்துள்ள மாளிகை ஒன்றில் இந்தக் கிணறு அமைந்துள்ளது.

இந்த கிணற்றில் காணப்படும் நீர் என்றும் வற்றாத நிலையில் காணப்படுகிறது. வறட்சியான காலநிலையிலும் வற்றிப் போகாமையினால் அந் தப் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அதிசயிக்கத்தக்க வகையில் அமைந்துள்ள இந்த கிணறு அந்தப்பகுதி மக்களுக்கு இயற்கை கொடுத்த வரமாக கருதப்படுகிறது.

எனினும் இந்தக் கிணற்றை மூடிவிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அந்தப் பகுதியின் ஊடாக பெரிய வீதி ஒன்றை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## புதிய நாணயங்கள் வெளியீடு

கொழும்பு, மார்ச் 29

இலங்கையில் வெளியிடப்பட்டுள்ள புதிய நாணயக் குற்றி தொடர்பில் மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

அண்மையில் 2000, 1500, 500 ரூபா நாணயக் குற்றிகள் வெளியிடப்பட்டன.

முதன்முறையாக பெரிய தொகையில் வெளியான நாணய குற்றிகள் தொடர்பில் சமூக வலைத் தளங்களில் அதிகம் பேசப்பட்டு வருகின்றது.

புதிய நாணயக் குற்றிகளின் வெளியீடு தொடர்பில் மத்திய வங்கி உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் தகவல் வெளியிட்டுள்ளது.

புத்த ஜயந்தியின் 2550 வருடங்களை பூர்த்தி செய்வதை நினைவு கூரும் வகையில் இந்த நாணயக் குற்றிகள் வெளியிடப் பட்டுள்ளன.

இந்த நாணயக் குற்றி பனிமலை சின்னத்திலான வெள்ளி உலோகத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு பாரம்பரிய விடயங்களை நினைவு கூரும் வகையில் மத்திய வங்கியால் நாணயத் தாள் மற்றும் நாணயக் குற்றிகள் வெளியிடுவது வழக்கமான விடயமாகும். (க)

## உதயங்கவின் கைதை உறுதி செய்தது அரசு!



கொழும்பு, மார்ச் 29

ரஷ்யாவுக்கான இலங்கை யின் முன்னாள் தூதர் உதயங்க வீரதுங்ககைது செய்யப்பட்டமையை இலங்கையின் அரச செய்தித் தாள்மீண்டும்உறுதிப்படுத்தியுள்ளது.

பல்வேறு பெரும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தேடப் பட்டு வந்த அவர், டுபாயில் உள்ள பாதுகாப்பான இடம் ஒன்றில் இருந்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையின் பாதுகாப்பு தரப்பினரின் உதவியுடன் அவர் கைதுசெய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இந்த செய்தியை அரசாங்க செய்தித்தாள் வெளியிட்ட போதும் அதனை மாற்று செய்தித் தாள்கள் மறுத்திருந்தன.

இந்தநிலையில், நேற்று அதிகாலை பதிப்பில், அரச செய்தித் தாள் இந்தச் செய்தியை உறுதிப் படுத்தியுள்ளது.

அத்துடன், உதயங்க வீரதுங்கவை இலங்கைக்கு அழைத்து வரும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன என செய்தித் தாள் குறிப்பிட்டுள்ளது.

## கொழும்பு மாநகர சபைக்குத் தெரிவான 11 புதிய உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம்



கொழும்பு, மார்ச் 29

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது கொழும்பு மாநகர சபைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புதிய உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்தனர்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

11 புதிய உறுப்பினர்கள் இவ்வாறு ஜனாதிபதியின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர். இந்த நிகழ்வில் அமைச்சர் பைசர் முஸ்தபா கலந்து கொண்டார்.

# உச்ச நீதிமன்ற தீர்ப்பில் உள்ளது காவிரி மேலாண்மை வாரியமே

புதுடில்லி,மார்ச் 29

காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் கூறப்பட்டுள்ள செயற்திட்டம் காவிரி மேலாண்மை வாரியம் தான் எனத் தமிழக அரசு தாக்கல் செய்த அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.




காவிரி வழக்கில் கடந்த பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி இறுதித் தீர்ப்பு அளித்த உச்ச நீதிமன்றம், 6 வார காலத்துக் குள் காவிரி நடுவர் மன்ற இறுதித்தீர்ப்பைஅமுல்படுத்து வதற்கானசெயற்திட்டங்களை மத்திய அரசு முன்னெடுக்க வேண்டும் என்று உத்தர விட்டது. இந்த 6 வாரக் காலக் கெடு இன்றுடன் முடிவடை கிறது.

இந்த நிலையில் காவிரி நீரைப் பெறும் தமிழகம், கர் நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களை மத்திய நீர்வளத்துறை அமைச்சக அதிகாரிகள் அழைத்துப் பேசி, காவிரி விவகாரத்தில் எழுத் துப்பூர்வ பிரமாணப்பத்திரங் களைத் தாக்கல் செய்யக் கேட்டுக் கொண்டனர். அதன் படி கர்நாடக அரசு பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தது.

இதேபோல் தமிழக அரசும் மத்திய நீர்வளத்துறை அமைச் சகத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளது. அதில், காவிரி வழக்குத் தீர்ப்பில் உச்சநீதி மன்றம் குறிப்பிட்டிருப்பது காவிரி மேலாண்மை வாரியம் தான் என்றும், குறிப்பிடப் பட்டுள்ள காலகெடுவுக்குள் காவிரி மேலாண்மை வாரியத் தையே அமைக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும், காவிரிப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு மேலாண்மை வாரியம் தான் என்றும் குறிப் பிடப்பட்டுள்ளது.

இதையடுத்து மத்திய நீர் வளத்துறைச்செயலாளர்தலை மையில் டில்லியில் ஆலோச னைக் கூட்டம் நடைபெற்று வருகிறது. இக்கூட்டத்தில், காவிரி நதிநீர் பங்கீடு பற்றிய உச்சநீதிமன்றத் தீர்ப்பை நடை முறைப்படுத்துவது தொடர் பாக ஆலோசனை நடத்தப் பட்டு வருகிறது.

இதற்கிடையே, மத்திய நீர் வளத்துறை அமைச்சர் நிதின் கட்காரியுடன், தமிழக அதிகா ரிகள் குழு நேற்றுச் சந்தித்து காவிரி மேலாண்மை வாரியம் பற்றி நேரில் வலியுறுத்தி யுள்ளது.

## தந்தையின் சடலத்தை 8 கி.மீற்றர் சைக்கிளில் தள்ளிச் சென்ற மகன்



இந்தியாவில் இறந்த தந்தையின் உடலை, அவரது பிள்ளைகள் 8 கிலோ மீற்றர் தூரம் வரை சைக்கிளில் கொண்டு சென்ற அவலம் நடந்துள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் பாராபங்கி பகுதியைச் சேர்ந்தவர் மன்ஷரம், இவர் உடல்நிலை சரியில்லாத காரணத்தால், அப்பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில், சிகிச்சை பயனின்றி உயிரிழந்த மன்ஷரமின் உடலை, வீட்டிற்கு கொண்டு செல்ல வாகன வசதி இல்லை.

இதனால், அவரின் மாற்றுத்திறனாளி மகனும், மகளும் சைக்கிள் ஒன்றில் தந்தையின் உடலை வைத்து, சுமார் 8 கிலோ மீற்றர் தூரம் வரை கொண்டு சென் றுள்ளனர். வட இந்தியாவில், இது போன்ற சம்பவங்கள் அடிக்கடி நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## டோக்லாம் விவகாரம்: ராகுல் காந்தி கிண்டல்



புதுடில்லி,மார்ச் 29

டோக்லாம் விவகாரத்தில் நமது 56 அங்குல பலம் வாய்ந்த மனிதரிடம் (பிரதமர் மோடி) ஒரு திட்டம் இருக்கும் என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கிண்டலாகத் தெரிவித்துள்ளார்.

இந்தியா, பூட்டான், சீனா வின் தன்னாட்சிப் பகுதியான திபெத் ஆகியவற்றின் முச் சந்தியாக விளங்குவது டோக் லாம். இங்கு அடிக்கடி சீனா படைகளைக் குவித்துப் பதற் றம் ஏற்படுத்துவது வழக்கமாக அமைந்துள்ளது.

கடந்த ஆண்டும் இதே போல டோக்லாம் பகுதியில் சீனா படைகளைக் குவித்தது. இந்தியாவும் பதிலுக்குப் படை களைக் குவித்தது. 73 நாள்கள், படைகள் குவிப்பால் பதற்றம் நீடித்தது. பின்னர் இரு நாடு களும் படைகளை விலக்கிக் கொண்டன.

இப்போது மீண்டும் டோக் லாம் பகுதியில் சீனா படை குவிப்பில் ஈடுபட்டு வருகின் றது எனத் தகவல்கள் வெளி யாகியுள்ளன.

இந்த விவகாரத்தில் பிரதமர் நரேந்திரமோடியைக் கிண்டல் செய்கிற வகையில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, டுவிட் டரில் ஒரு பதிவு வெளியிட்டு உள்ளார்.

அதில் அவர், டோக்லாமில் இருந்து இந்தியா பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று சீனா சொல்கிறது. கடந்த வாரம் எனது டுவிட்டர் கருத்து வாக்கெடுப்பில் ஆயிரக்கணக் கானோர் பங்கேற்றனர். டோக்லாம் பிரச்சினை யில் 63 வீதம் பேர் மோடி கட்டித் தழுவும் ராஜதந்திரத்தை பயன் படுத்த வேண்டும் என்று கூறினர்'' என்று தெரிவித்துள் ளார்

அத்துடன் , நமது 56 அங் குல பலம் வாய்ந்த மனிதரிடம் (பிரதமர் மோடி) ஒரு திட்டம் இருக்கும் என்று நான் நம்பு கிறேன் என்றும் குறிப்பிட் டுள்ளார்.

## மோடி செயலி தகவல்கள் சர்ச்சை: அமெரிக்க நிறுவனம் விளக்கம்

மோடி செயலி சர்ச்சை தொடர் பாக அந்த நிறுவனத்தின் நிறு வுநர்களில் ஒருவரான ஆனந்த் ஜெயின், தனது வலைப் பக்கத் தில் ஓர் அறிக்கை வெளியிட்டு உள்ளார்.

பிரதமர் நரேந்திரமோடி பெயரில், 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஒரு செயலி (நமோ ஆப்) தொடங்கப்பட்டது. இந்த செயலியை 50 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயன்படுத்தி வரு கின்றனர்.

இந்தச் செயலியில் இருந்து பொதுமக்களின் தகவல்களை அமெரிக்க நிறுவனமான கிள வர்டேப், சம்பந்தப்பட்டவர்களின் அனுமதியின்றி பெற்று, மூன் றாம் தரப்பினருக்கு மாற்றப் படுவதாக பிரான்ஸ் சைபர் பாது காப்பு வல்லுநர் எலியட் அல் டர்சன் தகவல் வெளியிட்டார்.

பேஸ்புக் சர்ச்சை முடிவதற் குள், இந்தத் தகவல் புதிய சர்ச் சையை ஏற்படுத்தியது.

இந்த கிளவர் டேப் நிறுவனம், 3 இந்தியர்களால் அமெ ரிக்காவின் கலிபோர்னியா மாகா ணத்தில் தொடங்கி நடத்தப் படுவது ஆகும்.

தற்போது எழுந்துள்ள மோடி செயலி சர்ச்சை தொடர் பாக, அந்த நிறுவனத்தின் நிறு வுநர்களில் ஒருவரான ஆனந்த் ஜெயின், தனது வலைப்பக்கத் தில் ஓர் அறிக்கையை வெளி யிட்டு உள்ளார்.

அதில் நமோ ஆப் பெயரை குறிப்பிடாமல், தனி நபர் அந்தரங்கம், பாதுகாப்பு, கிளவர் டேப் போன்ற சேவை நிறுவனங் களின் பங்களிப்பு பற்றி விவாதங்கள் எழுந்து உள்ளன. வெளியீட்டாளர்களின் தகவல் களைப் பொறுத்தவரையில், அவற்றை கிளவர் டேப் நிறு வனம் விற்பதோ, பகிர்ந்து கொள்வதோ, மறு சந்தையிடு வதோ அல்லது வேடிக்கை யாகவோ எதுவும் செய்வதில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளார்.

## தினகரனின் குக்கர் சின்னத்திற்கு தடை விதித்தது உச்ச நீதிமன்றம்



புதுடில்லி, மார்ச் 29

டி.டி.வி. தினகரன் தரப்புக்கு குக்கர் சின்னம் ஒதுக்கீடு செய்த டில்லி உயர்நீதிமன்ற உத் தரவுக்கு உச்ச நீதிமன் றம் இடைக்காலத்தடை விதித்து உத்தரவிட்டுள் ளது.

இரட்டை இலைச் சின்னம் வழக்கில் இரு தரப்பும் கூடுதலாக ஆவணங்களை தாக்கல் செய்யக்கூடாது என்றும் வழக்கை 3 வாரத்துக்குள் டில்லி உயர்நீதி மன்றம் விசாரித்து முடிக்க வேண்டும் என்றும் உச்சநீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் இந்த வழக்கை டில்லி உயர்நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரிக்கவும் உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## ஊழல் செய்வதில் போட்டி வைத்தால் பா.ஜ.க. அரசுதான் முதலிடம் பெறும்

### வாய் தவறிய அமித்ஷா

பெங்களூர், மார்ச் 29

கர்நாடகா மாநிலத்தில் முன்னாள் முதல்வர் எடியூரப்பா தலைமையி லான பா.ஜ.க. அரசில் தான் அதிக ஊழல்கள் நடைபெற்றன என பா.ஜ.க. தலைவர் அமித்ஷா வாய் தவறி கூறி யமை பெரும் பரபரப்பை ஏற்படுத் தியுள்ளது.

கர்நாடக மாநிலத்தில் வருகிற மே 12ஆம் திகதி சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ள நிலையில் அங்கு அரசியல் கட்சிகள் தேர்தல் வேலைகளை ஆரம்பித்துள்ளன. இந்த நிலையில் நேற்று முன்தினம் கர்நாடகாவுக்கு வருகை தந்த பா.ஜ.க. தேசியத் தலை வர் அமித்ஷா, சித்தராமையா தலை மையிலான காங்கிரஸ் அரசு மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களை தெரிவித்தார்.

அப்போது ஆவேசமாக பேசிய அவர், ஊழல் நிறைந்த ஆட்சி எது என்று போட்டி வைத்தால், அதில் பா.ஜ.கவைச் சேர்ந்த எடியூரப்பா அரசுக்குத்தான் முதலிடம் கிடைக்கும் என சமீபத்தில் ஓர் உச்ச நீதிமன்றின் ஓய்வுபெற்ற நீதிபதிகூறியுள்ளார்என்று கூறினார்.

அமித்ஷா பேச்சைக் கேட்டு அருகில் அமர்ந்திருந்த எடியூரப்பா அதிர்ச்சி அடைந்தார். உடனே அமித்ஷா அரு கில் இருந்த மற்றொரு பா.ஜ.க. தலை வர் அவர் செய்த தவறைச் சுட்டிக்காட்டி னார். இதையடுத்து சுதாகரித்துக் கொண்ட அமித்ஷா உடனடியாக காங் கிரஸ் அரசுதான் என்று மாற்றிக் கூறி னார். அது பா.ஜ.க. மத்தியில் சல சலப்பை ஏற்படுத்தியுள்ளது.

வினாத்தாள் 24 பகுதி II இன் தொடர்ச்சி...

21) இலங்கையில் முதன்முதலாகஅமைக்கப்பட்டகுளம்

1.திசாவாவி

2.கிரிதலைக்குளம்

3.பசவக்குளம்

4.வவுனிக்குளம்

22) மின்னல் தாக்கத்தக்கசாத்தியம் கூடுதலாக இருப்பது

1.வாகனத்தில் செல்லும் போது

2.திறந்த மைதானத்தில் நிற்கும்போது

3.பலகை இடப்பட்டதரையில் நிற்கும்போது

4.தார் வீதியில் செல்லும்போது

23) நாய் கடித்தால் முதலில் செய்யவேண்டியது

1.கடித்த இடத்தில் துணியால் கட்டுதல்

2.கடித்த இடத்தைசவர்க்காரமிட்டுசுத்தமானநீரினால் கழுவுதல்

3.கடித்த இடத்தில் மருந்துபூசுதல்

4.நோயாளியைமருத்துவரிடம் கொண்டுசெல்லுதல்

24) இக்குறியீடுகுறிப்பது



1.கர்ப்பிணித் தாயை

2.வலதுகுறைந்தவரை

3.வயதுவந்தவரை

4.பிள்ளையை

25) சோறுசமைப்பதற்காகஅரிசியைக் களைவதற்குமிகப் பொருத்தமானபாத்திரம்

1.மட் கோப்பை 2.பானை 3.அரிக்குஞ்சட்டி 4.பெரியமட்பாண்டம்

26) கஞ்சிதயாரிக்கபயன்படும் இலைவகையாகஅமையாதது

1.வல்லாரை 2.சிறுநாரைஇலை 3.கோப்பை இலை 4.வட்டுக்கத்தரி இலை

27) பிளாஸ்திக்குக் கோப்பையில் அடைக்கப்பட்டயோக்கற்றைஉண்பதற்குமுன்பதாககவனத்தில் கொள்ளவேண்டியது

1.அடைக்கப்பட்டதிகதி 2.காலாவதியாகும்திகதி

3. அடங்கும் பொருள் 4.தரநிர்ணய இலச்சினை





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

தரம்-5 பகுதி – II வினாத்தாள் 24

வினாத்தாள் 24 பகுதி II இன் தொடர்ச்சி...

**3) பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் நிறுத்தற்குறிகளைஎழுதுக**

**1.ஐயோஅம்மாஅந்தவேளையில் பெரியக்காவினால் என்னசெய்யமுடியும்**

........................................................................................................

2.மாமன்னரே நீங்கள் நேற்று இரவுகண்டகனவுயாது?

........................................................................................................

**4) ஒவ்வொருதமிழ் சொல்லுக்கும் பொருத்தமானஆங்கிலச் சொல்லை (ஆங்கிலஎழுத்துக்களில்) எழுதுக**

1.ஞாயிற்றுக்கிழமை .....................................

2.கறுப்பு .........................................

3.நண்பன் ..............................................

**5) பின்வரும் தாவர இலைகளில் மூன்றுஒத்தவடிவத்தைஉடையன.வேறுபட்டவடிவத்தைஉடையதாவர இலைஎது?**

1.வெற்றிலை 2.மிளகு 3.வட்டக்கண்ணி 4.திப்பிலி

**6) தேசப்படங்களில் நதிகளைகாட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நியமநிறம் எது?**

1.கபிலம் 2.நீலம் 3.ஊதா 4.பச்சை

**7) பின்வரும் பொருள்களிடையேபித்தளைப் பாத்திரங்களைத் துப்பரவாக்கிமினுக்குவதற்குமிகப் பொருத்தமானதுஎது?**

1.பழப்புளி 2.தேங்காய்ப்பூ 3.தேயிலைச் சக்கை 4.சுட்டஉமி

**8) விளக்குத்திரிவழியாகவிரைவில் மேல் நோக்கிசெல்லும் எண்ணெய் வகைஎது?**

1.தேங்காய்எண்ணெய் 2.கடுகுஎண்ணெய் 3.பசுநெய் 4.மண்ணெண்ணெய்

9) "ஆலையிலே சோலையிலே ஆலங்காடிச் சந்தையிலே

கிட்டிப் புள்ளும் பம்பரமும் கிறுகியடிக்க பாலாறு பாலாறு"

**மேலே தரப்பட்டுள்ள பாடல் எந்த விளையாட்டுடன் தொடர்புடையது**

1.எல்லே 2.கிட்டியடித்தல் 3.பம்பரமாட்டல் 4.நீச்சற்போட்டி

**10) ஒருபேருந்தில் உள்ளஆண் பயணிகளின் எண்ணிக்கைஅதில் உள்ளபெண் பயணிகளின் எண்ணிக்கையின் மூன்றுமடங்காகும். அடுத்ததரிப்பிடத்தில் 4 பெண்கள் பேருந்தில் ஏறியபின்னர் ஆண்களின் எண்ணிக்கையும் பெண்களின் எண்ணிக்கையும் சமமாகும். இப்போதுபேருந்தில் உள்ளபயணிகளின் எண்ணிக்கையாது?**

1.8 2.12 3.32

**11) 2007 ஆம் ஆண்டில் 365 நாள்களும் 2008 ஆம் ஆண்டில் 366 நாள்களும் உள்ளன. 2007 ஆம் ஆண்டில் ஜனவரி 01 ஆம்திகதிதிங்கட்கிழமையாகும். 2008 ஆம் ஆண்டில் ஜனவரி 01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையாகும். இதற்கேற்ப 2009 ஜனவரி 01 ஆம் திகதி**

1.திங்கட்கிழமை 2.புதன்கிழமை 3.வியாழக்கிழமை

**12) சந்திரன் தோற்றாதஒருநாளில் நள்ளிரவில்வீட்டில் இருந்துவெளியேவந்துவானைப் பார்க்கும் போதுதொலைவில் உள்ளவானில் பறந்துசெல்லும் கிளிக்கூட்டத்தைக் காணலாம் எனமோகன் கூறுகிறான். இதுநடைபெற இயலாது. இதற்குகாரணம்**

1.இருளில் அத்தகையஒருநிகழ்வைபார்க்கமுடியாமை

2.இரவில் கிளிகள் பறந்துசெல்லவேண்டியதேவை இல்லாமை

3.கிளிகள் கூட்டமாகப் பறந்துசெல்லாமை

13) கண்ணனின் ஒரேபிள்ளையாகியரவிபாடசாலைக்குத் தாமதமாகவந்துதம்பியுடன் கடைக்குச் சென்றுதிரும்பிவருவதற்குத் தாமதமாகவந்துதம்பியுடன் கடைக்குசென்றுதிரும்பிவருவதற்குத் தாமதம் ஏற்பட்டதெனக் கூறினான். இது உண்மையாக இருக்கலாம். இதற்குகாரணம் என்ன?

1.ரவிஉலாவித் திரியவிரும்புகின்றமை

2.ரவிக்குச் சிலசகோதரர்களும் சகோதரிகளும் இருக்கின்றமை

3.ரவியின் சிறியதகப்பனாரின் ஒருமகனும் ரவியின் வீட்டில் இருக்கின்றமை





14) ஒருதொட்டியில் நிரப்பத்தக்கநீரின் கனவளவு 8 750 லீற்றர் ஆகும். அத்தொட்டியில் தற்போது 3695 லீற்றர் நீர் உள்ளது. எஞ்சியுள்ளபகுதியைநிரப்பத் தேவைப்படும் நீரின் கனவளவுயாது?

......................................................................................................


15) காலை 10.00 மணிக்குபுறப்படக் குறிக்கப்பட்டபேருந்துஒன்று 20 நிமிடங்களுக்குபின்னர் பயணத்தைஆரம்பித்தது. அப்பயணத்திற்கு 4 மணித்தியாலம் 45 நிமிடம் எடுத்தது. பேருந்துபயணத்தைப் பூர்த்திசெய்தநேரம் யாது?

......................................................................................................

16) கூட்டுக 1/6 +2/3=

17) காட்டப்பட்டுள்ள இலக்கஅட்டைகள் நான்கையும் பயன்படுத்திஆக்கத்தக்கமிகப்பெரியஎண் யாது?

.............................................................




18) பித்தளைமேசைக் கரண்டியில் சிறிதளவுநீரை இட்டுமெழுகுதிரிச் சுவாலையில் பிடிக்கும்போது

1. நீரின் நிறம் மாறும்
2. நீரின் இயல்புமாறுபட்டது
3. நீரின் வேகம்
4. நீர் உள்ளகரண்டிவெப்பமானது

19) இலங்கையில் ஒரேமாகாணத்திலிருந்து இரு பிரதானஆறுகள் கடலுக்குள்ளேபாய்கின்றன. அவை

1.மகாவலிகங்கைஇவளவைகங்கை

2.வளவைகங்கை இகளனிகங்கை

3.களனிகங்கை இகளுகங்கை

4.ஜிங் கங்கைஇகளுகங்கை

20) இலங்கைஅரச இலச்சினையில் நிலைத்திருப்பதைகுறிப்பது

1.தர்ம சக்கரம்

2.நிறைகுடம்

3.பூவிதழ்

4.சூரியனும் சந்திரனும்

# சிரியாவில் ரஷ்ய ராணுவத்தின் வான் தாக்குதலில் 27 பேர் பலி!



பெய்ரூட், மார்ச் 29

சிரியா நாட்டின் தலைநகர் டமாஸ்கஸ் பகுதியில் ரஷ்ய விமானப்படைத் தாக்குதலில் 27 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

சிரியா நாட்டில் 2011ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. பயங்கரவாதிகளை அழிக்கும் நடவடிக்கையில் இதுவரை அங்கு 3 லட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். ஐ.எஸ். பயங்கரவாதிகளை அழிப்பதில் ரஷ்யாவும் இணைந்து செயல்படுகிறது. இதுபோன்ற தாக்குதல்களில் சில சமயம் அப்பாவி பொதுமக்களும் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், சிரிய தலைநகர் டமாஸ்கஸில் உள்ள போராட்டக்காரர்களைக் குறிவைத்து நேற்று முன்தினம் ரஷ்ய விமானப் படை விமானங்கள் குண்டுவீசித் தாக்குதல்களை நடத்தின. இந்தத் தாக்குதலில் 27 பேர் கொல்லப்பட்டனர் என ரஷ்ய இராவத் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும் இந்தத் தாக்குதல்களில் 58 பேர் படுகாய மடைந்துள்ளனர் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

கடந்த 23ஆம் திகதி அர்பின் பகுதியில் உள்ள மருத்துவ மனையை குறிவைத்து நடத்தப்பட்ட விமானப்படைத் தாக்குதலில் 37 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஏலத்தில் விடப்படவுள்ள ட்ரம்பின் நிர்வாணச் சிலை



அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் நிர்வாணச் சிலை வருகிற மே 2 ஆம் திகதி நியூஜெர்சியில் உள்ள ஜெர்சி நகரில் ஏலம் விடப்படவுள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் நிர்வாணச்சிலை வெண்ட்கோஸ்ட் பகுதியை சேர்ந்த சிற்பி ஒருவரால் உருவாக்கப்பட்டது. அவரை அதிபராக தேர்ந்தெடுப்பதற்கு முன்பு இது வடிவமைக்கப்பட்டது. அதிபரானபிறகு அந்த சிலையை அழிக்க முடிவு செய்யப்பட்டது. தற்போது அதைஏலத்தில்விடஜூலியன் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

ஏலம் வருகிற மே 2ஆம் திகதி நியூஜெர்சியில் உள்ள ஜெர்சி நகரில் நடக்கிறது. இந்த சிலை 13 லட்சம் ரூபா முதல் 22 லட்சம் ரூபா வரை ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பின்லாந்தில் பாடசாலை ஆசிரியராக ரோபோ



ஹெல்சிங்கி, மார்ச் 29

பின்லாந்தின் தென்பகுதியில் டேம்பர் என்ற நகரம் உள்ளது. அங்குள்ள ஒரு தொடக்கப் பாடசாலையில் 'ரோபோக்கள்' ஆசிரியர்களாக பணிபுரிகின்றன.

இங்கு இவை மொழி ஆசிரியர்களாக உள்ளன. இவற்றால் 23 மொழிகளை புரிந்து கொண்டு கற்பிக்க முடியும். ஆனால் தற்போது இவை ஆங்கிலம், பின்னிஸ் மற்றும் ஜேர்மன் மொழிகளை மட்டுமே கற்றுத்தருகின்றன.

பாடசாலைக் குழந்தைகள் கேட்கும் கேள்விகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் திருப்தி தரும் பதில்களை அவை அளிக்கின்றன. அதற்கேற்ற வகையில் அவற்றில் செயலிகள் பொருத்தப்பட்டுள்ளன.

குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தருவது மட்டுமின்றி அவர்களுடன் சேர்ந்து நடனம் ஆடியும் அவை மகிழ்விக்கின்றன. இந்த ரோபோவுக்கு 'எலியாங்' அலை எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த 'ரோபோ'க்கள் ஆசிரியைகளுடன் பணிபுரிகின்றன. ஒரு கருவியான 'ரோபோ' வகுப்பறையில் மாணவர்களுக்கு வித்தியாசமாக கல்வியைக் கற்றுத் தருகிறது என மொழி ஆசிரியை ரிகாகொழுங்சாரா தெரிவித்தார் .

# எதியோப்பியாவின் புதிய பிரதமராக அபிய் அகமது

அடிஸ் அபாபா, மார்ச் 29

கிழக்கு ஆபிரிக்க நாடான எத்தியோப்பியாவின் புதிய பிரதமராக அபிய் அகமது தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஏறத்தாழ 100 மில்லியன் மக்கள் வாழும் இந்நாடு உலகின் நிலம்சூழ் நாடுகளில் மிகுந்த மக்கள்தொகை கொண்ட நாடாகவும், ஆபிரிக்காவிலேயே நைஜீரியாவுக்கு அடுத்ததாக இரண்டாவது அதிக மக்கள்தொகை கொண்டநாடாகவும் விளங்குகின்றது. அடிஸ் அபாபா இதன் தலைநகரமும், மிகப் பெரிய நகரமும் ஆகும்.

அந்நாட்டின் பிரதமராக ஐலிமரியாம் தேசாலென் கடந்த 2012ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.



அவரது ஆட்சிக்கு எதிராகக் கடந்த மூன்று ஆண்டுகளாக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அந்நாட்டின் வளர்ச்சி நன்மைகள் சாதாரண மக்களுக்கு சரியாகக் கிடைக்கவில்லை எனக் குற்றச்சாட்டு எழுந்தது.

எதியோப்பியாவில் நிலவிவந்த குழப்பங்களுக்கு தீர்வு காணப் பிரதமர் ஐலிமரியாம் தேசாலென் நீண்டகாலமாக முயற்சி செய்துவந்தார். ஆனால் அவரது முயற்சிகள் தோல்வியடைந்தன. இதனால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகப் பிரதமர் ஐலிமரியாம் தேசாலென் கடந்த பெப்ரவரி 16ஆம் திகதி ராஜினாமா செய்தார்.

இந்த நிலையில், எதியோப்பி யாவின் புதிய பிரதமராக அபிய் அகமது தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

# பாகிஸ்தானில் முதல் செய்தி தொகுப்பாளராகிய திருநங்கை



பாகிஸ்தானின் முதல் திருநங்கை செய்தித் தொகுப்பாளராக மார்வியா மாலிக் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குச் சமூக ஊடகங்களில் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

பாகிஸ்தான் நாட்டின் தனியார் தொலைக்காட்சியில் திருநங்கையான மார்வியா மாலிக் பணியாற்றி வருகிறார். இவர் நாட்டின் முதல் திருநங்கை செய்தி தொகுப்பாளர் ஆவார். மார்வியா முதல் முதலாக மார்ச் 23ஆம் திகதி தொலைக்காட்சியில் செய்தி வாசித்தார். இது பற்றிய தகவல் டுவிட்டரில் பதிவு செய்யப்பட்ட உடன் வைரலாகப் பரவியது.

மார்வியா மாலிக்கிற்குப் பாராட்டுக்கள் குவிகின்றன. திருநங்கைகள் பணியாற்ற வேண்டும் என்பதற்கு இவர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். இது திருநங்கை சமூகத்தினருக்கு தன்னம்பிக்கையை அதிகரிக்கும்.

திருநங்கைகள் தங்களுடைய பாலின அடையாளத்தை முடிவு செய்துகொள்ள அதிகாரம் அளித்து பாகிஸ்தான் செனட் அவை சமீபத்தில் தீர்மானத்தை நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது.

# குழந்தையை மடியில் வைத்தபடி தேர்வு எழுதிய பல்கலை மாணவி

காபூல், மார்ச் 29

ஆப்கானிஸ்தானில் குழந்தையை மடியில் வைத்தபடி தேர்வு எழுதிய பல்கலைக்கழக மாணவியின் புகைப்படம் சமூக வலைத்தளத்தில் வைரலாக பரவி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தான் பயங்கரவாதிகளின் தாக்குதல்களால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடு. அங்குள்ள பெண்களிடம் படிப்பறிவு மிகவும் குறைவு. எனவே அவர்கள் இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தப்படுகிறார்கள்.

இத்தகைய நாட்டில் குக்கிராமத்தைச் சேர்ந்த 25 வயதுப் பெண் ஒருவர் படிப்புக்காக பல்கலைக்கழகத்தில் சேர நுழைவுத் தேர்வு எழுதினார். திருமணமான அவர் 3 குழந்தைகளின் தாய்.

அவரது பெயர் ஜகந்தாப் அகமதி. விவசாயியான இவர் டாஸ்குந்தி மாகாணத்தைச் சேர்ந்தவர். இதில் விசேடம்



என்னவென்றால் தேர்வு எழுதுவதற்கு பிறந்த தனது கைக்குழந்தையுடன் வந்து இருந்தார். தனது கிராமத்தில் இருந்து திலி நகருக்கு மலைப் பாதை வழியாக 2 மணி நேரம் நடந்து வந்தார். அங்கிருந்து 9 மணி நேரம் பஸ் பயணம் மூலம் காபூல் வந்து தேர்வு எழுதினார்.

அவர் தேர்வுக் கட்டணத்தை ஆப்கானிஸ் தான் இளைஞர் சங்கத்தினர் உதவியுடன் செலுத்தினார். தேர்வு எழுதிக் கொண்டிருந்தபோது அவரது குழந்தை காது வலியால் அழுதது.

உடனே கைக்குழந்தையின் அழுகையை நிறுத்திச் சமாதானப்படுத்தினார். பின்னர் அதிகாரி அனுமதியுடன் குழந்தையைதேர்வு அறைக்குள் கொண்டு வந்தவர் அதை மடியில் கட்டிக் கொண்டு தரையில் அமர்ந்தபடி தேர்வு எழுதி முடித்தார்.

குழந்தையை மடியில் கட்டியபடி தனியார் பல்கலைக்கழகத்தில் தேர்வு எழுதிய அகமதியின் போட்டோவை பேராசிரியர் நசீர் குராவ் எடுத்து சமூக வலைதளத்தில் வெளியிட்டார். அது வைரலாகப் பரவி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சில சமயம் டோனி வெல்வார்; சில சமயம் நான் வெல்வேன்




சென்னை சூப்பர் கிங்ஸ் அணி ஐ.பி.எல் 2018 முதல் போட்டியில் ரோஹித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

2 ஆண்டுகளுக்குப் பிறகு டோனி தலைமையில் சென்னை சூப்பர் கிங்ஸ் களமிறங்குவதையடுத்து டோனி வெல்ல வேண்டும் என்ற ஆர்வங்கள் ஏற்கெனவே சென்னை ரசிகர்களை ஆட்டிப்படைக்கத் தொடங்கி விட்டன.

இந்த நிலையில் சென்னை சூப்பர் கிங்ஸ் இணையத்தளத்தில் அதன் வீரர் டிவைன் பிராவோ கூறியதாவது:

எங்கள் ரசிகர்களுக்காக நான் வித்தியாசமாக எதையும் செய்வேன். இம்முறையும் என் நடனத்தை அவர்கள் எதிர்பார்ப்பார்கள்.

ஐ.பி.எல். வரலாற்றில் இரண்டு மிகப் பெரிய அணிகள் சி.எஸ்.கே. , மும்பை இந்தியன்ஸ் ஆகும். இரண்டுமே வெற்றிகரமான அணிகள். அனைவரும் இந்தப் போட்டியை ஆவலாக எதிர்பார்க்கின்றனர். தொடரின் முதல் போட்டி என்ற விதத்தில் இதைவிட மிகப்பெரிய போட்டி ஒன்று இருக்க முடியாது.

இப்படிப்பட்ட போட்டிகள்தான் என்னை உத்வேகம் கொள்ளச் செய்கின்றன.

ஐ.பி.எல். தொடரில் அனைத்து அணிகளும் சிறந்த அணிகள் என்பதால் தொடக்கம் அருமையாக இருக்க வேண்டும். இந்தத் தொடரில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம், எனவே நன்றாகத் தொடங்க வேண்டும். ஏனெனில் பிற்பாடு மீண்டு எழுவது கடினமாகப் போய்விடும்.

டோனி என் மீது நிறைய நம்பிக்கை வைத்துள்ளார். என்னைப் பொறுத்தவரை அனைத்தும் தயாரிப்பில்தான் உள்ளது. வலைப்பயிற்சிகளில் டோனிக்கு நான் எப்பவுமே கடைசி ஓவர்களை வீசுவதைப் போல் வீசுவேன், காரணம் அவர் உலகின் தலைசிறந்த ஸ்பின்னர்களில் ஒருவர். அவருக்கு வீசுவது மூலம் என்னை நானே சவாலுக்குட்படுத்திக் கொள்வேன்.


எப்பவுமே ஒரு கற்பனையான சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டு பயிற்சி செய்வோம். நான் பந்து வீசுவேன் இதில் சில சமயம் அவர் வெல்வார், சில சமயம் நான் வெல்வேன்.

தலைவராக அவர் மிகச்சிறந்தவர். வீரர்கள் தங்களை வெளிப்படுத்திக் கொள்ள எப்பவுமே அனுமதிப்பார். செய்யும் தவறுகளிலிருந்து மீள வாய்ப்பளிப்பார். அவர் மிகவும் அமைதியாக இருப்பவர் இந்தக் குணம் எப்பவும் நல்லது.

என்று டிவைன் பிராவோ தெரிவித்துள்ளார்.

## நிதாஹஸ் கிண்ணத்தில் இந்தியா வெற்றி;

# கிரிக்கெட் பந்தயத்தில் தோற்ற இளைஞர் இறந்தார் என நாடகமாடியது அம்பலம்




நிதாஹஸ் கிண்ணப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில், பங்களாதேஷ் வெற்றி பெறும் என்று பந்தயம் கட்டி தோற்ற இளைஞர் இறந்தார் என நாடகமாடிய சம்பவம் நடந்துள்ளது.

இலங்கையில் நடைபெற்ற நிதாஹஸ் ரி – 20 போட்டியின் இறுதி ஆட்டத்தில், இந்திய அணி பங்களாதேஷை வீழ்த்தி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

பரபரப்பாக நடந்த இந்தப் போட்டியில், பங்களாதேஷ் வெற்றி பெறும் என்று அந்த நாட்டைச் சேர்ந்த அடில் சிக்டர் என்ற இளைஞர் சமூக வலைதளத்தில் ஆயி ரத்து 800 டொலர்கள் பந்தயம் கட்டினார்.

ஆனால், பங்களாதேஷ் தோல்வியைத் தழுவியதால் பந்தயம் கட்டியவரை ஏமாற்ற, தான் இறந்து விட்டேன் என நாடகமாடியுள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் வீடியோ ஒன்றையும் சமூக வலைதளங்களில் பதிவேற்றியுள்ளார்.

அந்த வீடியோவில், 2 பேர் சிக்டரின் கழுத்தை அறுத்துக் கொலை செய்வது போன்ற காட்சிகள் உள்ளன. மேலும், ரத்தத்திற்கு பதிலாக சிவப்பு நிறப் பழரசத்தை அவர் பயன்படுத்தியதும், இதற்காக வீடியோகிராபர் ஒருவரை நியமித்ததும் தெரிய வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, இது தொடர்பான குற்றச்சாட்டில் பங்களாதேஷ் பொலிஸார் அடில் சிக்டரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அடில் சிக்டர் தான் இறந்து விட்டேன் என நாடகமாடிய பின்னர் தனது சகோதரரை தொலைபேசியில் அழைத்து, குரலை மாற்றிப் பேசி சிட்டகாங் பகுதியில் இருக்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர், அடில் சிக்டரின் குடும்பத்தினர் இது பற்றி முறைப்பாடு அளிக்கவே, பொலிஸார் சிக்டரைக் கைது செய்துள்ளனர்.

இது பற்றி அடில் சிக்டர் கூறுகையில்

இறந்து விட்டேன் என நாடகமாடியதால், பந்தயம் கட்டியவர் என்னிடம் பணம் வாங்க வேண்டும் என நினைக்கவில்லை. ஆனால், அந்த வீடியோ இவ்வளவு விபரீதம் ஆகும் என நினைக்கவில்லை எனத் தெரி வித்துள்ளார். (ப)

# மலேசியாவில் இலங்கை ராணுவ கிரிக்கெட் அணி

இலங்கை ராணுவக் கிரிக்கெட் குழுவினர் மலேசியா கிரிக்கெட் குழுவினரின் அழைப்பையேற்று கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்டுள்ளனர்.

கடந்த 25 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஏப்ரல் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ள ராணுவக் கிரிக்கெட் அணியினர் இலங்கையில் இருந்து கடந்த 25 ஆம் திகதி மலேசியா சென்றுள்ளனர்.

இலங்கை இராணுவக் கிரிக்கெட் குழுவினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இலங்கை சர்வதேச கிரிக்கெட் குழுவினர் அணியில் லெப்டினன்ட் அஜந்த மென்டிஸ் மற்றும் நிறைவேற்று அதிகாரி சீக்குகே பிரசன்ன ஆகியோர் இந்தப் போட்டியில் பங்குபற்றுகின்றனர்.

இந்த சர்வதேச 20/20 சுற்று போட்டி நேற்று முன்தினம் முதல் நாளை வரை நடைபெறும். இப்போட்டியில் இலங்கை இராணுவ கிரிக்கெட் குழுவினர் பங்குபற்றவுள்ளனர்.

இந்தப் போட்டி மலேசியா சர்வதேச கிரிக்கெட் குழுவினருடன் நடைபெற இருக்கும் போட்டி (50 பந்துகள்) என்ற ரீதியில் ஏப்ரல் முதலாம் ஆம் திகதி தொடக்கம் 3ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இத்தகைய போட்டிகள் நடைபெறுவதால் வீரர்கள் மத்தியில் சுயநம்பிக்கை அதிகரிக்கின்றதோடு பல்வேறு போட்டிகளில் விளையாடும் திறனும் உரு வாகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

# மனைவியை சந்திக்க முகமது ஷமி மறுப்பு

விபத்தில் காயமடைந்த கிரிக்கெட் வீரர் முகமது ஷமியைப் பார்க்க வந்த அவரது மனைவி ஹசின் ஜகானை சந்திக்க அவர் மறுத்துவிட்டார்.

இந்திய அணியின் வேகப்பந்து வீரர் முகமது ஷமி. இவர் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது மனைவி ஹசின் ஜகான் குடும்ப வன்முறை குற்றச்சாட்டை கூறினார். ஷமிக்கு பல பெண்களுடன் தொடர்பு உள்ளது எனவும் சூதாட்டத்தில் ஈடுபட்டார் எனவும் அவர் குற்றம்சாட்டினார்.

இது தொடர்பாகக் கிரிக்கெட் ரபயின் ஊழல் தடுப்பு குழு விசாரணை நடத்தி முகமது ஷமி குற்றமற்றவர் என்று அறிவித்தது. இதைத் தொடர்ந்து வீரர்கள் ஒப்பந்த பட்டியலில் இடம் பெற்றார். அதோடு ஐ.பி.எல். போட்டியிலும் ஆடுகிறார். இந்த நிலையில் முகமது ஷமி விபத்து ஒன்றில் காயம் அடைந்தார்.

அவரைப் பார்ப்பதற்காக மனைவி ஹசின் ஜகான் சென்றுள்ளார். ஆனால் ஷமி மனைவியை சந்திக்க மறுத்துவிட்டார். இது பற்றி ஹசின் ஜகான் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:–

காயம் அடைந்த ஷமியை பார்ப்பதற்காக சென்றேன். ஆனால் என்னை சந்திக்க அவர் மறுத்துவிட்டார். அத்துடன் என்னை மிரட்டினார். நீதிமன்றில் சந்திக்கலாம் என்றார். குழந்தையை சந்தித்து விளையாடினார். அவரது தாயார் ஒரு பாதுகாவலர் போல் அவருடனே இருந்தார். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஹசின் ஜகான் கொடுத்த குற்றச்சாட்டின் பெயரில் ஷமி மற்றும் அவரது குடும்பத்தினர் மீது பொலிஸில் வழக்கு பதிவாகி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# இளைஞர்களுக்கு டோனி அறிவுரை





உடலைப்பேணிகாப்பதில் இளைஞர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என இந்திய வீரர் டோனி அறிவுரை வழங்கியுள்ளார்.

கர்நாடக மாநிலம் பெங்களூரில் விளையாட்டு வீரர்களுக்கான ஆயத்த ஆடைகளை விற்பனை செய்யும் மையம் ஒன்றை இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் டோனி திறந்து வைத்தார்.

அப்போது தன்னைப் பார்க்க ஆவலுடன் கூடியிருந்த இளம் ரசிகர்கள் முன் பேசிய அவர், அழகிய நகரமான பெங்களூரில் என் மீது அன்பு வைத்துள்ள ஏராளமான ரசிகர்கள் கூடியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

விளையாட்டில் ஈடுபாடு உள்ள இளைஞர்கள் உடல் நலத்தைப் பேணி காப்பதில் ஆர்வமாக இருங்கள், கிரிக்கெட், உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுகளில் எப்போது வேண்டுமானாலும் வாய்ப்புகள் வரலாம்.

அப்படியானவாய்ப்புகள் வரும்பொழுது நம் உடல் உறுதியாக இருந்தால் மட்டுமே தேசிய, சர்வதேச அளவிலான போட்டிகளில் வாய்ப்புகள் கிடைக்கும்.

எந்த வயதிலும் புகழின் உச்சத்தை நம்மால் அடைய முடியும், எனவே உடலை ஆரோக்கியமாக வைத்து விளையாட்டில் மட்டுமின்றி உடற்பயிற்சியிலும் ஈடுபடுவது அவசியம் என்று பேசியுள்ளார்.

# பந்தைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டு:



## ஸ்மித், வோர்னருக்கு ஓராண்டு தடை

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது கிரிக்கெட் போட்டியில் பந்தைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் ஆஸ்திரேலிய வீரர்கள் ஸ்மித், வோர்னர் ஆகியோருக்கு ஓராண்டு விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் ஸ்டீவன் ஸ்மித்தின் கப்டன் பதவியும், வோர்னரின் துணை கப்டன் பதவியும் பறிக்கப்பட்டது. சர்வதேச கிரிக்கெட் சபை ஸ்மித்துக்கு ஒரு டெஸ்டில் விளையாடத் தடை விதித்தது. அத்தோடு 100 வீத அபராதமும் விதிக்கப்பட்டது. பான்கிராட்டுக்கு 75 வீத அபராதம் விதிக்கப்பட்டது.

இது பற்றி விசாரணை நடத்திய ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைத் தலைவர் சுதர்லாண்ட், வோர்னர் மற்றும் ஸ்மித் உடனடியாக நாடு திரும்புவார்கள். அவர்கள் மீதான தடை குறித்து 24 மணி நேரத்துக்குள் அறிவிக்கப்படும் எனத் தெரிவித்தார்,

இந்த நிலையில், பந்தைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பாக ஸ்மித், வோர்னர் ஆகியோருக்கு ஓராண்டு விளையாட ஆஸ்திரேலிய கிரிக்கெட் பை தடை விதித்துள்ளது. பந்தை சேதப்படுத்திய பான் கிராப்டுக்கு 9 மாதங்கள் விளையாடத் தடை விதித்துள்ளது என விளையாட்டு இணையத்தளங்கள் அனைத்தும்செய்திவெளியிட்டுள்ளன.இதுதொடர்பாக அதிகாரபூர்வ தகவல்கள் விரைவில் வெளியாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸிம்பாப்வே கப்டனை சூதாட்டத்துக்கு அணுகிய கிரிக்கெட் சங்க நிர்வாகிக்கு 20 ஆண்டுகள் தடை

ஸிம்பாப்வே கிரிக்கெட் அணியின் கப்டன் கிரிமரை சூதாட்டத்துக்கு அணுகிய கிரிக்கெட் சங்க நிர்வாகிக்கு 20 ஆண்டுகள் தடை விதித்து ஐ.சி.சி. உத்தரவிட்டுள்ளது.

ஸிம்பாப்வே கிரிக்கெட் அணியின் கப்டன் கிரிமரை, அந்த நாட்டில் உள்ள ஹராரே மாநகர கிரிக்கெட் சங்கப் பொருளாளரும், சந்தைப்படுத்தல் இயக்குநருமான ராஜன் நாயர் கடந்த ஆண்டு கிரிக்கெட் சூதாட்டம் (மேட்ச் பிக்சிங்) செய்வது பற்றி அணுகிப் பேசினார். இது பற்றி கிரிமர் உடனடியாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிடம் (ஐ.சி.சி.) புகார் தெரிவித்தார்.



இந்தச் சம்பவம் பற்றி ஐ.சி.சி.யின் ஊழல் தடுப்பு பிரிவு விசாரணை நடத்தியது. இதில் சூதாட்டத்துக்காக கிரிமருடன் தொடர்பு கொண்டதை ராஜன் நாயர் ஒப்புக்கொண்டார். இதையடுத்து கிரிக்கெட் தொடர்பான நடவடிக்கைகளில் பங்கேற்க ராஜன் நாயருக்கு 20 ஆண்டுகள் தடை விதித்து ஐ.சி.சி. உத்தரவிட்டுள்ளது.

## ஐதராபாத்தின் சன்ரைசஸ் கப்டன் பதவியிலிருந்து விலகிய வோர்னர்



பந்தைச் சேதப்படுத்திய விவகாரத்தால் ஐதராபாத் சன்ரைசஸ் அணியின் கப்டன் பதவியில் இருந்து ஆஸ்திரேலிய வீரர் டேவிட் வோர்னர் விலகினார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தென்னாபிரிக்கச் சுற்றுப்பயணம் மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது. வீரர்கள் அறையில் இருநாட்டு வீரர்கள் மோதல், களத்தில் மோதல், ரசிகர்களுடன்வாக்குவாதம்என பலசர்ச்சைகளில் ஆஸ்திரேலியா சிக்கி இருந்தது.

அத்தோடு பந்தைச் சேதப்படுத்திய பிரச்சினையில் சிக்கியது அவமானத்தை ஏற்படுத்தியது. கப்டன் ஸ்டீவன் ஸ்மித்தின் உதவியுடன் புதுமுக வீரர் பான்கிராப்ட் பந்தை சேதப்படுத்தினார். இது வீடியோவில் தெளிவாகத் தெரிந்தது. பந்தைச் சேதப்படுத்தியதை இருவரும் பகிரங்கமாக ஒப்புக்கொண்டனர்.

பந்தைச் சேதப்படுத்திய விவகாரத்தில் ஸ்டீவன் ஸ்மித்தின் கப்டன் பதவியும், வோர்னரின் துணை கப்டன் பதவியும் பறிக்கப்பட்டது. சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ஸ்மித்துக்கு ஒரு டெஸ்டில் விளையாட தடை விதித்தது. அதோடு 100 வீத அபராதமும் விதிக்கப்பட்டது. பான்கிராப்டுக்கு 75 வீத அபராதம் விதிக்கப்பட்டது. மேலும், ஸ்டீவன் ஸ்மித், டேவிட் வோர்னர் மற்றும் பான்கிராப்ட் ஆகியோர் தென்னாபிரிக்கா தொடரில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டனர்.

இந்த நிலையில், டேவிட் வோர்னர் ஐ.பி.எல். தொடரின் ஐதராபாத் சன்ரைசஸ் அணியின் கப்டன் பதவியிலிருந்து விலகியுள்ளார். முன்னதாக, ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் கப்டன் பதவியில் இருந்து விலகுகிறேன் என ஸ்மித் கூறினார். இதனால் ரகானே கப்டனாக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## ஸ்மித், வோர்னர், பான்கிரொப்ட் ஆஸிக்குத் திரும்ப அழைப்பு

கேப்டவுனில் நடந்த தென்னாபிரிக்காவுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியின்போது பந்தை சேதப்படுத்திய சர்ச்சையில் சிக்கிய ஆஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்டீவன் ஸ்மித், உப தலைவர் டேவிட் வோர்னர் மற்றும் துடுப்பாட்ட வீரர் கெமரூன் பான்கிரொப்ட் மூவரையும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை நாட்டுக்குத் திருப்பி அழைத்துள்ளது.

தலைமைப் பயிற்சியாளர் டெரன் லீமன் இந்த சர்ச்சையில் தொடர்பில்லை என்றும் அவர் தொடர்ந்து தனது பதவியில் இருப்பார் என்றும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஜேம்ஸ் சதர்லாண்ட் குறிப்பிட்டார்.

இந்த விவகாரம் தொடர்பான விசாரணை பூர்த்தியான அடுத்த 24 மணி நேரத்திற்குள் தண்டனைகள் அறிவிக்கப்படும் என்றும் சதர்லாண்ட் நேற்றுமுன் தினம் (27) குறிப்பிட்டிருந்தார்.

இது போட்டி உணர்வை கொண்டதல்ல. இது ஆஸ்திரேலிய கிரிக்கெட்டுக்கு நல்ல நாள் அல்ல என்று அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

தென்னாபிரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் ஆஸ்திரேலிய அணியின் எஞ்சிய போட்டிகளுக்கு விக்கெட் காப்பாளர் டிம் பெயின் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் நாடு திரும்பும் இந்த வீரர்களுக்கு மாற்றாக மத்தியூ ரென்ஷோ, கிளென் மக்ஸ்வெல் மற்றும் ஜோ பேர்ன் ஆகியோர் ஆஸ்திரேலிய அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஜொஹன்னஸ்பேர்கில் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் நான்காவது டெஸ்ட் போட்டிக்கு ஆஸ்திரேலிய அணியுடன் இணையவுள்ளனர்.

## கோஹ்லிக்கு இங்கிலாந்து முன்னாள் வீரர் எதிர்ப்பு

இந்திய அணியின் கப்டன் விராட் கோஹ்லியை, இங்கிலாந்தில் கவுண்டி கிரிக்கெட்டில் விளையாட அனுமதிப்பதற்கு இங்கிலாந்து முன்னாள் வீரர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் பொப் வில்லிஸ் அளித்த ஒரு பேட்டியில்,

இந்திய அணியின் கப்டன் விராட் கோஹ்லியை, இங்கிலாந்தில் கவுண்டி கிரிக்கெட்டில் விளையாட அனுமதிப்பது முட்டாள்தனமானது. அதுவும் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு முன்பாக அவர் இங்குள்ள சூழலில் விளையாடி பழகிவிட்டால், தனது திறனை வளர்த்துக் கொள்வார். கடந்த முறை அவர் இங்கிலாந்தில் ஓர் அரைசதம் கூட அடிக்கவில்லை. அதேநிலையை அவரைத் தொடர வைக்க வேண்டும். முன்பு போலவே அவர் இங்கிலாந்து மண்ணில் திணற வேண்டும். வெளிநாட்டு வீரர்கள் வந்து ஆடுவதால் இங்கிலாந்தின் 2ஆம் தர வீரர்களுக்கும், இளம் வீரர்களுக்கும் கவுண்டி போட்டியில் ஆடும் வாய்ப்பு குறைந்து விடுகிறது என்று தெரிவித்துள்ளார்.

## மத்தியிலே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாநகர சபை, சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர சபைகளில் இவ்வாறு கூட்டு ஆதரவால் ஆட்சியைப் பிடித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நேற்றும் காரைநகர், வலி.மேற்கு பிரதேச சபைகளில் ஈ.பி.டி.பி. ,ஐ.தே.க. , சு.க. ஆகியவற்றின் முழு ஆதரவுடன் நிர்வாகத் தலைமையைத் தனதாக்கியது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தலைவர், உப தலைவர் தெரிவுகள் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நடைபெற்று வருகின்றன.

காரைநகர் பிரதேச சபைத் தலைவர் தெரிவு நேற்றுக் காலை இடம்பெற்றது . 11 ஆசனங்களைக் கொண்ட காரைநகர் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்று ஆசனங்களையும் ஈ.பி.டி.பி. இரண்டுஆசனங்களையும், சுயேச்சைக் குழு மூன்று ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி இரண்டு ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஓர் ஆசனத்தையும் வென்றன.

தலைவர் தெரிவின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பிலும் சுயேச்சைக் குழு சார்பிலும் பிரேரிக்கப்பட்ட இருவருக்கிடையில் போட்டி இடம்பெற்றது. இதன்போது ஈ.பி.டி.பியின் இரண்டு உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும் ஆதரவு வழங்கியதால், அங்கு கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றியது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு சார்பில் பிரேரிக்கப்பட்ட விஜயதர்மா கேதீஸ்வரதாஸ் ஏழு வாக்குகளைப் பெற்றுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதேபோன்று, ஈ.பி.டி.பி., ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் முழு ஆதரவுடன் வலி.மேற்குப் பிரதேசசபையின் ஆட்சி அதிகாரத்தையும் நேற்றுக்கைப்பற்றியது கூட்டமைப்பு.

நேற்றுப் பிற்பகல் வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் தெரிவு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம. பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதுதமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பில் தருமலிங்கம் நடனேந்திரனின் பெயரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் தேவராஜா ரஜீவனின் பெயரும் பிரேரிக்கப்பட்டன.

இதில், ரஜீவனை ந.பொன்ராசா முன்மொழிய ப. நின்மதி வழிமொழிந்தார். நடனேந்திரனைக் கூட்டமைப்பைச்சேர்ந்த உமாபதி முன்மொழிய ஜெயந்தன் வழிமொழிந்தார்.

இவர்களுக்கு மேலதிகமாக சபையின் நடைமுறையை மீறி ஈ.பி.டி.பியைச்சேர்ந்தவர்களான சி.பாலகிருஷ்ணன் மற்றும் நடராசா ஆகியோரும் நடனேந்திரனை முன்மொழிந்து வழிமொழிந்தனர்.

நடனேந்திரனுக்கு அவரோடு இணைந்து கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஒன்பது பேர், ஈ.பி.டி.பியைச் சேர்ந்த நான்கு பேர், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மூவர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் மற்றும் சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த இருவருமாக 19 பேர் வாக்களித்தனர்.

இதனைத் தொடர்ந்து உப தலைவருக்கான தெரிவின் போது கூட்டமைப்பைச் சேர்ந்த வே.சச்சிதானந்தத்தை அந்தக் கட்சியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் முன்மொழிய, ஐ.தே.கவைச் சேர்ந்த குணசிறி வழிமொழிந்தார். வேறுபிரேரிப்புகள் இன்மையால் அவரே உப தலைவராக அறிவிக்கப்பட்டார்.

வடக்கிலுள்ள ஏனைய சபைகளுடன் ஒப்பிடுகையில் வலி. மேற்கு பிரதேசசபையில் தவிசாளர் மற்றும் உப தவிசாளரை ஏனைய கட்சிகளும் இணைந்து முன்மொழிந்து வழிமொழிந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. (ஐ-7)

## காங்கேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளுக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்திய அரசால் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி காங்கேசன்துறை துறைமுகத்தில் தற்போது காணப்படும் பகுதிகளை மறுசீரமைப்பு செய்தல் மற்றும் புதிய இறங்கு துறையொன்றை அமைத்தல் ஆகிய வற்றுக்கான ஆயத்தப் பணிகளை முன்னெடுக்க இந்த ஒப்புதலை அமைச்சரவை வழங்கியுள்ளது.

புதிய இறங்கு துறையின் பணிகளை இலங்கைத் துறைமுக அதிகார சபையால் மேற்கொள்வதற்கும் இதற்குத் தேவையான கொள்முதல் மற்றும் தொழில்நுட்பங்களை மதிப்பீடு செய்வதற்கான குழுவொன்றை அமைப்பதற்கும் துறைமுகம் மற்றும் கடல் நடவடிக்கைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க சமர்ப்பித்த ஆவணங்களுக்கே இந்த ஒப்புதல் வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பிரேரணையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் மத்தியசெயற்குழுவும் இது தொடர்பில் ஆராய்வதற்காக இன்று கூடுகிறது.

பிரதமருக்கு எதிராகக் கூட்டு எதிரணியால் நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது எதிர்வரும் 4ஆம் திகதி விவாதம் நடத்தப்பட்டு வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றப்பெரும்பான்மையுடன் நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றிக் கொள்வோம் எனக் கூட்டு எதிரணிதிட்டவட்டமாக அறிவித்துள்ளதுடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐ.தே.கவின் உறுப்பினர்களின் ஆதரவு இதற்குக் கிடைக்கும் என்றும் கூறியுள்ளது.

ஐ.தே.கவின் இராஜாங்க அமைச்சரான பாலித ரங்கே பண்டார உள்ளிட்டவர்கள் பிரதமர் கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலகாவிடின், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும் நிலை ஏற்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, இந்த விவகாரத்தில் ஐ.தே.கவும், ஐ.தே.முன்னணியும் நாடாளுமன்றில் எவ்வாறு செயற்பட வேண்டுமெனப் பிரதமர் இன்று ஐ.தே.கவின் மத்திய செயற்குழுவுடனும், ஐ.தே. முன்னணியின் தலைவர்களுடனும் கலந்துரையாடவுள்ளார். (ஐ)

## வெட்கமற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று சொன்னவர்கள் – ஈ.பி.டி.பி. மீது காரசாரமான விமர்சனங்களை முன்வைத்தவர்கள் இன்று அரச தரப்புடன் இணைந்துதான் சபைகளை தற்போதுஉருவாக்குகின்றார்கள் என்பது வெட்கக்கேடான விடயம்.

– இவ்வாறு சாடியுள்ளார் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் முக்கியஸ்தரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கியதேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் ஆதரவுடன் உள்ளூராட்சிச் சபைகளில் ஆட்சியைக் கைப்பற்றி வருவது குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

ஈ.பி.டி.பியை ஒட்டுக் குழு, தமிழ் மக்களின் எதிரி , துரோகி, போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தவர்கள் என்றெல்லாம் சொல்லிவந்த கூட்டமைப்பினர் இன்று தாம் ஆட்சியமைப்பதற்காக ஈ.பி.டி.பியுடன் பேச்சு நடத்தி அவர்களது ஆதரவைப்பெற்றுச் சபைகளில் ஆட்சியமைத்து வருகின்றார்கள்.

அதேபோல ஆளுந்தரப்பில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிஆகிய இரு பிரதான கட்சிகளதும் ஆதரவையும் பெற்றிருக்கின்றனர். ஆகவேவடக்கு – கிழக்கில் அமைக்கப்படும் உள்ளூராட்சிச் சபைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி., ஐ.தே.க., சு.க. ஆகிய கட்சிகள் இணைந்த கூட்டு அமைப்பாகத்தான் உருவாக்கப்படுகின்றன.

ஆட்சிமையக்கவேண்டுமென்ற காரணத்துக்காக இவர்களது ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்வதென்பது இதுவரையும் அவர்கள் சொல்லி வந்த கொள்கை,கோட்பாடு சகலதையும் கைவிட்டுவிட்டார்கள் என்பதைக் காட்டுகிறது. அத்துடன், அரசுடன் கடந்த மூன்று வருடங்களாக இணக்கப்பாட்டுடன் செயற்பட்டு வந்தவர்கள் என்ற அடிப்படையில், தற்போது முழுமையாகவே ஆளுந் தரப்போடும் ஈ.பி.டி.பியோடும் இணைந்து இந்தச் சபைகளில் ஆட்சியமைக்கின்றனர்.

ஆகவே இவர்களுடைய இந்தச் செயற்பாடுகள் ஒரு விடயத்தைத் தெளிவாகக் காட்டி நிற்கின்றது. அது என்னவென்றால், தமிழ் மக்கள் முன்வைத்த அல்லது தமிழ் மக்கள் கொடுத்த ஆணைகள் எல்லாத்தையும் கைவிட்டுவிட்டுத் தமது பதவிகளுக்காகவும் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் ஏனையோரிடம் மண்டியிட்டுவிட்டார்கள் என்பதுதான் வெளிப்படையான உண்மை.

எங்களிடம் யாருமே நேரடியாக ஆதரவைக் கேட்டுவரவில்லை. அவ்வாறு வந்திருந்தால் அதைப் பற்றி நிச்சயமாக ஒரு முடிவை எடுத்திருப்போம். அவ்வாறான சூழ்நிலைகள் ஏற்படாத பட்சத்தில் நடுநிலை வகிப்பதென்ற முடிவை எடுத்திருக்கின்றோம். அதற்கமையவே சில இடங்களில் தற்போது நடுநிலை வகித்திருக்கின்றோம். அதே முடிவுகளுடான எமது நிலைப்பாடே தொடரும்.– என்றார். (ஐ)

## சந்தேக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளனர்.

5 பொலிஸாரும் சேவையில் மீள இணைக்கப்பட்டதையடுத்து அவர்களின் பிணை நிபந்தனைகளில் ஒன்றை இலகுபடுத்தப்படுத்துமாறு முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதியளித்தது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கின் சுருக்க முறையற்ற விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த நிலையில் சந்தேக நபர்களான 5 பொலிஸாரும் கடந்த செப்ரெம்பர் 14ஆம் திகதி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

5 சந்தேகநபர்கள் ஒவ்வொருவரும் 50 ஆயிரம் ரூபா காசுப் பிணை, 2 இலட்சம் ரூபா பெறுமதியிலான 2 ஆள் பிணையில் செல் அனுமதிக்கப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் கையொப்பமிடவேண்டும். சந்தேகநபர்களின் கடவுச் சீட்டு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றப் பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவர்கள் 5 பேரும் வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்குமாறு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிடப்படுகிறது என்று பிணை விண்ணப்பங்கள் மீதான கட்டளையில் நிபந்தனைகளை விதித்திருந்தார் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன்.

5 பொலிஸ் உத்தியோகத்தர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டால் அவர்களைத் தென்னிலங்கையில் மீளவும் பணியில் இணைத்தது பொலிஸ் திணைக்களம்.

தென்னிலங்கையில் பல்வேறு பகுதிகளிலிருந்து கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் சென்று கையொப்பமிடுவது சிரமமாகவுள்ளதாகவும், அந்த நிபந்தனையில் தளர்வு செய்யுமாறும் சந்தேகநபர்கள் சார்பில் மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் மீதான சீராய்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

அதன் மீதான விசாரணை நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர்கள் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக் கிழமை கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் கையொப்பமிடுவதற்கு அனுமதிக்கப்படுவதாக மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ் செழியன் திருத்திய கட்டளையை வழங்கினார்.

### பின்னணி

யாழ்ப்பாணபல்கலைக்கழக மாணவர்கள் விஜயகுமார் சுலக்சன், நடராஜா கஜன் ஆகியோர் கொக்குவில் – குளப்பிட்டியில் 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் 20ஆம் திகதி நள்ளிரவு பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். யாழ்ப்பாணப்பொலிஸார் மீது கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டது. (ஐ)

## கோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

இந்த ஊடகச் சந்திப்பில், மத்திய வங்கி ஊழலுடன் தொடர்புபட்ட அர்ஜுன் மகேந்திரனை கைது செய்வதில் தாமதம் ஏற்படக் காரணம் என்ன? இந்த விடயத்தில் பிரதமருக்குத் தொடர்பு உள்ளதா? எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

இந்தக் கேள்விக்கு அவர் பதில் அளிக்கையில்,

மத்திய வங்கியில் அர்ஜுன் மகேந்திரனைப் பதவியில் அமர்த்திய விடயத்துடன் பிரதமருக்குத் தொடர்புள்ளது. அப்போது பிரதமருக்கு நாம் எச்சரிக்கை விடுத்தும் அவர் கேட்கவில்லை.

என்றாலும் பிற்காலத்தில் அவர் அதனை உணர்ந்து கொண்டார். அர்ஜுன் மகேந்திரன் தவறு செய்தவர் என்பதைப் பிரதமர் ஒப்புகொண்டார். அதன் காரணமாகவே பிரதமர் அவரைக் காப்பாற்றவில்லை.

அர்ஜுன் மகேந்திரனை ஏன் காப்பாற்றவில்லை என இப்போதும்கூட பிரதமரின் குடும்பத்தார் அவரிடம் கேள்விகளை முன்வைத்து வருகின்றனர். இதனால் பிரதமரின் குடும்பத்திலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

தவறு செய்த எவரையும் பிரதமர் தண்டிக்காமல் விடமாட்டார். நானாக இருந்தாலும் தவறு செய்தால் எனக்காக முன்வரமாட்டார். வேறு தலைவர்கள் குற்றச் செயல்களுடன் ஈடுபட்டவர்களைக் காப்பாற்ற முயற்சி செய்தாலும் பிரதமர் அவ்வாறு செய்வதில்லை. அதுவே அவருக்குப் பிரச்சினையாகவும் உள்ளது என்றார்.

அதனைத் தொடர்ந்து கோட்டாபய போன்றோர் மீது குற்றச்சாட்டுகள் மட்டும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அவர்களை ஏன் கைதுசெய்யவில்லை? என ராஜிதவிடம் கேள்வியெழுப்பப்பட்டது.

அதற்கு ராஜித பதிலளிக்கையில், நீங்கள் நினைப்பது போல அவசரமாக விசாரணைகளைச் செய்ய முடியாது. கோட்டாபய கொலைகளைச்செய்தார் என்பது உறுதியாகி விட்டது. என்றாலும் விரைவில் அவற்றை வெளிப்படுத்துவோம்.

சரத் பொன்சேகாவை விசாரித்தது போல எம்மை நடந்துகொள்ளுமாறு கூறுகின்நீர்களா? விசாரணைகளின் முடிவில் விரைவில் அனைத்தையும் வெளிப்படுத்துவோம் என்றார். (ஐ)

## போலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறியியலாளர் ரொசான் சந்திர குப்தா தெரிவித்தார்.

இந்த வருடத்தின் முதல் 2 மாதங்களிலும் 529 பேஸ்புக் கணக்குகளை முடக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. போலிக் கணக்குகளை ஆரம்பித்தல், பேஸ்புக் கணக்குகள் மூலம் நிதி மோசடியில் ஈடுபடுதல் உள்ளிட்ட குற்றச் செயல்களை அடிப்படையாகக் கொண்டே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன், இவ்வாறான முறைப்பாடுகளின் அடிப்படையில் கடந்த வருடத்தில் மாத்திரம் 3 ஆயிரத்து 600 முகநூல் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன என்று ரொசான் சந்திர குப்தா மேலும் கூறினார். (ஐ)

# வெசாக்கிற்காக மே தினம் 7 ஆம் திகதி ஒத்திவைப்பு



## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 29

இம்முறை சர்வதேசத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மே முதலாம் திகதி இடம்பெறவுள்ள கூட்டங்களையும் பேரணிகளையும், அந்தத் தினத்துடன் இணைந்ததாகக் கொண்டாடப்படும் வெசாக் வாரத்தை கருத்திற்கொண்டு மே 07 ஆம் திகதிக்குப் பிற்போடுவதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் மகா சங்கத்தினரால் விடுக்கப்பட்ட கோரிக்கையைக் கருத்திற்கொண்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்வரும் வெசாக் பௌர்ணமி தினத்தைத் தொடர்ந்துவரும் வாரத்தில் பௌத்த சமய கொண்டாட்டங்களை நாடு முழுவதும் கோலாகலமாக மேற்கொள்வதற்கு மகா சங்கத்தினரின் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் ஏற்று தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என ஜனாதிபதி தெரிவித்தார்.

இதனிடையே மே 07 ஆம் திகதி அரச விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்தத் தினத்தில் சர்வதேச தொழிலாளர் தின நிகழ்வுகளை மேற்கொள்ளுமாறு சகல அரசியல் கட்சிகளுக்கும் தொழிற் சங்கங்களுக்கும் அழைப்பு விடுக்கிறோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற, இலங்கை அமரபுர மகாசங்கச் சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அமரபுர மகா நிக்காயவின் சூலகந்தி பிரிவின் மகா நாயக்கர் சாஸ்ரபதி அதி.வண. கந்துனே அஸ்ஸஜி தேரருக்கு நியமனப் பத்திரத்தை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்-

பௌர்ணமி தினத்தில் தனியார் வகுப்புக்களை நடத்துதல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுப் புதிய நடை முறை ஒன்றைச் செயற்படுத்த எதிர்பார்க்கிறோம்.

இந்த விடயம் தொடர்பில் தனியார் வகுப்புக்களை நடத்தும் நிறுவனங்களிடம் கோரிக்கை ஒன்றை முன் வைக்கவும் பொருத்தமான சட்ட ஏற்பாடுகளை மேற் கொள்ளவும் எதிர்பார்க்கிறோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் இலங்கை அமரபுர மகா நிக்காயவின் மகாநாயக்கர் அக்கமகா பண்டித அதி.வண. கொட்டுகொட தம்மாவாச தேரர் உள்ளிட்ட மூன்று நிக்காயாக்களின் மகா சங்கத்தினரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் காமினி ஜயவிக்கிரம பெரேரா, கயந்த கருணாதிலக்க, மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த் தன, ருவான் விஜேவர்தன ஆகியோரும் பங்குபற்றினர்.

# அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?

## வடக்கு மாகாண சபையில் முதல்வரிடம் கேள்வி

வடமாகாணசபையின் முன்னாள் அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவர்களைக் குற்றவாளிகளாக அடையாளப்படுத்திய முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், அவர்களின் மீது சுமத்திய குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்குச் சட்டரீதியான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை எனச் சீறியுள்ள மாகாண சபை உறுப்பினர்கள் இதனை விசாரிக்கத் தெரிவுக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் எனவும் நேற்றுமுன்தினம் சபை அமர்வில் கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள்.

வடமாகாண சபையின் 119 ஆவது அமர்வு நேற்றுமுன் தினம் பேரவை செயலகத்தின் சபா மண்டபத்தில் நடை பெற்றிருந்தது.

இதன்போது எதிர்கட்சித்தலைவர் சி.தவராசா மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனிடம் வாய்மொழிவினாஒன்றைஎழுப்பியிருந்தார். அதில் முன்னாள் அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவர்களைப் பதவி நீக்கிய முதலமைச்சர், அவர்கள் செய்தவை எனக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க எடுத்துள்ள மேலதிக நடவடிக்கை என்ன எனவும் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் அமைச்சர்கள் சபையை மாற்றுவதற்காகவே விசாரணை குழு அமைக்கப்பட்டதாகவும், தற்போது அமைச்சர்கள் சபை மாற்றப்பட்டுள்ளதால் மேலதிக நடவடிக்கை தேவையற்றது எனவும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற விவாதத்தின் போதே உறுப்பினர்கள் மேற்படி குற்றச்சாட்டைக் கூறியிருக்கின்றார்கள்.

இந்த விடயம் தொடர்பாக சபையில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த முன்னாள் சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் –

எங்களைக் குற்றஞ்சாட்டி குற்றவாளிகளாக்கி வெளியில் விட்ட நீங்கள், எங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? மக்களுடைய பணம் ஒரு ரூபா கூடக் களவாடாமல், எனக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யாமல், தண்டனை அனுபவிக்க நான் தயாராக இல்லை. எனவே எந்த விசாரணைக்கும் நான் தயார். வெளியே மக்கள் கேட்கும் கேள்விகளுக்கும், என்னுடைய பிள்ளைகள் வீட்டில் கேட்கும் கேள்விகளுக்கும், என்னுடைய பிள்ளைகளைப் பாடசாலையில் சகமாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்கும் என்னால் பதிலளிக்க முடியவில்லை. முதலமைச்சர் நியமித்த விசாரணைக் குழுவே என்னைக் குற்றமற்றவன் எனவும் என்னுடைய செயற்பாட்டுக்கு மாகாண சபை ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கூறியுள்ள நிலையில் என் மீது நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்.

அது போதாதென 750 கோவைகளை நான் திருடிச் சென்றேன் எனவும், மருத்துவ உபகரணங்கள் கொள்வனவில் நான் ஊழல் செய்தேன் எனவும் ஊடகங்களுக்கு கூறியுள்ளீர்கள். ஆகவே அந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படவேண்டும். – என்றார்.

இதனை தொடர்ந்து கருத்துத் தெரிவித்த மாகாணசபை அவை தலைவர் சீ.வி. கே.சிவஞானம் அடுத்த அமர்வில் இது குறித்து முதலமைச்சர் பதிலளிப்பார் என வும் கூறினார்.

# கரையோர வள முகாமைத்துவ திட்டம் ஜனாதிபதியிடம் கையளிப்பு



கொழும்பு, மார்ச் 29

2018 ஆம் ஆண்டுக்கான இலங்கைக் கரையோர வலயங்கள் மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் கரையோர வளங்கள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தியினால் இந்தத் திட்ட அறிக்கை ஜனாதிபதியிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அனுர திசாநாயக்க உள்ளிட்ட குழுவினர் பங்குபற்றினர்.

(க)

# சுற்றுலா பயணிகளை விரட்டிய யானை; சர்வதேச ஊடகங்களில் வெளியான படங்கள்!



கொழும்பு, மார்ச் 29

யால தேசிய பூங்காவில் யானை ஒன்று செயற்பட்ட முறை தொடர்பான படங்கள் சர்வதேச ஊடகங்களில் பிரபல மடைந்துள்ளன.

யால தேசிய பூங்காவிற்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்ட குடும்பத்தினரின் வாகனத்தை இடைமறித்த யானை அதில் உணவு தேடியுள்ளது.

உணவு கிடைக்காமையினால் கோபமடைந்த யானை சுற்றுலா பயணித்தவர்களின் ஜீப் வண்டியை தாக்க முயன்றுள்ளது.

எனினும் சாரதி தனது இருக்கையை விட்டு சற்று தூரம் தள்ளி சென்றுள்ளார். இதனால் யானை வித்தியாசமாக கூச்சலிட ஆரம்பித்துள்ளது.

சுற்றுலாப் பயணத்தில் ஈடுபட்டவர்கள் அச்சத்தில் சத்தமிட ஆரம்பித்தவுடன் சாரதி ஒருவாறு வேக மாக வாகனத்தை ஓட்டியதனால் அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

யானை அந்த ஜீப் வண்டியை துரத்தி சென்ற போதிலும் அதற்கு அதனை பிடிக்க முடியவில்லை எனக் கூறப்படுகின்றது.

வனவிலங்கு புகைப்பட கலைஞர் Sergey Savvi தனது மனைவியுடன் யால தேசிய பூங்காவிற்கு சென்ற சந்தர்ப்பத்தில் இந்தப் படங்களை எடுத்துள்ளார்.

(க)

# சித்திரைப் புது வருடத்துடன் புதிய வரிகளும் அறிமுகம்

## பந்துல குணவர்த்தன எம்.பி. விசனம்



கொழும்பு, மார்ச் 29

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் இது வரை காலமும் இல்லாத வகையில் பல்வேறு துறைகளுக்கும் வரி அறவிடப்படுவதுடன் புதிய வருடம் உதயமாகும் எனக் கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏப்ரல் மாதம் முதலாம் திகதியில் இருந்து காணி ஒன்றின் உரிமை மாற்றம் செய்யும்போது அல்லது மற்றொருவருக்கு விற்பனை செய்யும் போது 10 சதவீத வரி செலுத்த வேண்டும்.

அதேபோல் மாடி வீடுகளை கொள்வனவு செய்யும் போது நூற்றுக்கு 15 சதவீத வற்வரி செலுத்த வேண்டும். இதுபோன்ற பல வரிகளை ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து செலுத்த வேண்டும்.

அதேநேரம், சித்திரைப் புத்தாண்டு நிறைவடைந்த உடனேயே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் பெற்றோல் விலையை அதிகரிக்கும் என்றும் பந்துல சுட்டிக்காட்டியுள்ளார்.

வட்டு. கிழக்கு - துறட்டிப்பனை
அருள்மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்
நூதன பஞ்ச தள இராஜகோபுர
மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்



கும்பாபிஷேகம்
பங்குனி மாதம்
18ஆம் நாள் 01.04.2018
ஞாயிற்றுக்கிழமை
முகூர்த்தம்
காலை 9.10 மணி முதல்
10.25 மணி வரை

அன்னை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற வில்லு மண்டபத்தோடு கூடிய அதிகம்பீரமாகவும், அழகிய சிற்ப வேலைகளும் வர்ண வேலைகளும் அமையப்பெற்ற பஞ்சதள இராஜகோபுரத்திற்கும் புதிதாக வரவழைக்கப்பெற்ற நாகராஜப்பெருமானுக்கும் புதிய மணிக்கோபுரத்திற்கும் 01.04.2018 ஞாயிற்றுக்கிழமை சித்திரை நட்சத்திரமும், அமிர்தசித்தயோகமும் கூடிய காலை 9 மணி 10 நிமிடம் முதல் 10 மணி 25 நிமிடம் வரையுள்ள இடப இலக்கின சுப புண்ணிய வேளையில் பங்குனித் திங்கள் 16ஆம் நாள் (30.03.2018) வெள்ளிக்கிழமை அதிகாலை 6 மணிக்குள் கர்மாரம்பம். பங்குனித் திங்கள் 17ஆம் நாள் (31.03.2018) சனிக்கிழமை காலை 9 மணி முதல் எண்ணெய்க்காப்பு சாத்துதல் ஆரம்பமாகும்.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'

இங்ஙனம்:
ஆலய பெறுநரும்
இராஜகோபுர திருப்பணிக் குழுவினரும்.

CJ Promoters
பெருமையுடன் வழங்கும்
CARNIVAL
RIDES FOOD GAMES MUSIC
சிறுவர்களுக்கான சித்திரைக் கொண்டாட்டம்
8-12 April 2018 3:00 am to 10:00 pm
இடம் : மாநகர சபை மைதானம், யாழ்ப்பாணம்.
சித்திரப் போட்டி
15/03/2018ம்திகதி முதல் 3/04/2018ம் திகதி வரை
பங்கு பெற விரும்பும் மாணவர்கள் உங்கள் பாடசாலை ஊடக 03/04/2018ம் திகதிக்கு முன் பொறுப்பாசிரியர்களிடம் ஒப்படைக்கவும் 12/04/2018 அன்று மாநகர சபை மைதானத்தில் மாபெரும் மேடையில் கண்காட்சியுடன் பரிசில்களும் வழங்கப்படும்
மாணவர்கள் தமது கைப்பட வரைந்து வர்ணம் திட்டியதை ஆசிரியர்களினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்
Main Sponsor
Atlas
சித்திரப் போட்டி குழுக்கள்
4~5 வர்ணம் தீட்டுதல்
6~7 மிருகம்/பறவை
8~9 காலைக்காட்சி/மாலைக்காட்சி
10~12 கடற்கரைக்காட்சி/மலை/வயல்
13~15 கருத்து வெளிப்பாட்டுச்சித்திரம்
மேலதிக விபரங்களுக்கு
0763494111 பிரசன்னா
ORGINIZING BY CJ PROMOTERS

2nd year
Jaffna's bigest CHILDREN FUN FESTIVAL
CJ PROMOTERS
சிறுவர்களுக்கான சித்திரைக் கொண்டாட்டம்
சித்திரை மாதம்
8ம் திகதி முதல் 12ம் திகதி வரை நடாத்தப்படவிருக்கும் சிறுவர்களுக்கான சித்திரைக் கொண்டாட்ட நிகழ்வில்
DDTV
ஊடக அனுசரணையுடன் நடாத்தப்படும் மாபெரும் கலை நிகழ்ச்சிகளில் தனி நடனம் மற்றும் குழு நடனத்தில் பங்கு பற்ற விரும்பும் போட்டியாளர்கள் பங்குனி 20ம் திகதிக்கு முதல் விண்ணப்ப படிவங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
Contact
fb.com/ddtvsrilanka Yt.com/ddtvsrilanka ddtvnetwork@gmail.com Tp-021 222 6036

DAN TELEVISION



ஏற்பாட்டில்
வடக்கின் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி
புதிய விடியல்
5 லீக்குகள்
50 கழகங்கள்
பங்களிப்புடன்
8 லட்சம் ரூபா பணப்பரிசில்களை
வாரி வழங்கும்
உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி
7ஆவது வருடமாக
ஆட்டங்கள் தொடர்ந்து
துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.
பிரதான அனுசரணை:
காலைக்கதிர் Kalaikkathir
TOPAZ
No.72, Grand Bazaar,Jaffna.
Tel: +94 21 222 4743
இணை அனுசரணை
SARAVANA PRESS
OFFSET & DIGITAL PRINTING
சரவணா அச்சகம்

# மரண அறிவித்தல்

## திருமதி நடராஜா பாக்கியம்



காரைநகர் - களபூமி, பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும், இல. 184/14A, குருநாதர் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா பாக்கியம் நேற்று (28.03.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளையின் அன்பு மகளும், நடராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகளும், குகராஜ் (ஊடகவியலாளர் - Dan TV), ஆனந்தராஜ் (Dialog), கோகுலராஜ் (கட்டட நிர்மாணத்துறை), சண்முகராஜ் (மென்பொருள் வடிவமைப்பாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மோகனராணியின் அன்புச் சகோதரியும், சிவபாதம் (கனடா), காலஞ்சென்ற பரஞ்சோதி, சவுந்தராம்பிள்ளை, மயில்வாகனம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஈஸ்வரி, தவமணி, கணேசப்பிள்ளை ஆகியோரின் சகலையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2018) வியாழக்கிழமை காலை 9மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

184/14A, குருநாதர் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.